பக்கங்கள்: 09

# காலைக்கதிர்


Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை 02.08.2020 கதிர் 137

### கூட்டமைப்பின் வெற்றியை உறுதிப்படுத்த

# முழுத் தமிழிழரும் ஒன்றுசேர்ந்து புதனன்று வாக்களியுங்கள்!

## தமிழரசின் தலைவர் மாவை அறைகூவல்



யாழ்ப்பாணம், ஓக. 02

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்மாபெரும்வெற்றியைஉறுதிப்படுத்த எதிர்வரும் 5ஆம் திகதி ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்றுசேர்ந்து அணிதிரண்டு வாக்களிக்க வேண்டும்.**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான மாவை சேனாதிராஜா கோரிக்கை விடுத்தார்.**

4

## மஹிந்தவின் கோட்டையில் பெண்ணொருவர் கொலை

### துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி

கொழும்பு, ஓக. 02

துப்பாக்கிச் சூட்டில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்டம், பெலியத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்முல்ல பிரதேசத்தில் இன்று காலை 9.55 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

4

## தனிமைப்படுத்தப்பட்ட கைதிகள் 3 பேர் தப்பினர்

கொழும்பு, ஓக. 02

களுத்துறை சிறைச்சாலையின் மூன்று கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையான கைதிகள் மூன்று பேர் தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்காக களுத்துறைச் சிறைச்சாலையின் தனி இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர் எனச் சிறைச்சாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

4




**கிளிநொச்சியில் இன்று மாலை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் பெருமளவான மக்கள் பங்கேற்றனர்**



## 2 பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கிப் பரிதாப பலி!

கொழும்பு, ஓக. 02

கிரிந்திவெல - ரன்வல பகுதியிலுள்ள நீரோடையில் நேற்று நீராடச் சென்ற இரண்டு பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்

4

## சூட்டுக் காயத்துடன் பெண்ணின் சடலம்!

கொழும்பு, ஓக. 02

பெலியத்த, பல்லத்தர பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இன்று காலை இடம்பெற்றதாகவும், இந்தப் பெண்ணின் சடலம் வீட்டு வளாகத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் 52 வயதுடையவர் எனவும், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் கூறினர்.




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் - The Distinctive Voice of The Tamil Speaking People


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2020
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
நிரந்தர அரசியல் உரிமை...
நிலையான அபிவிருத்தி...
நிலத்தினில் தமிழராய் நிமிர்ந்திட...
X
10
சிவஞானம் சிறீதரன்
M.Ed, B.A, PGDE(Mt), PGDEM, Sp. Tr(Ag)
WWW.FACEBOOK.COM/IMSHRITHARAN
WWW.SHRITHARAN.COM

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தப்புமா தமிழர் பிரதிநிதித்துவம்?

புதன்கிழமை நடைபெறவிருக்கின்ற பொதுத் தேர்தலின் போது தமிழர் தரப்பில் பிரதான பேசுபொருளான மாவட்டங்களுள் ஒன்றாக இருப்பது திருகோணமலை.

அங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் போட்டியிடுகின்றார். உடல் தளர்ந்த நிலையில் மிகவும் இக்கட்டுச் சூழலில் அங்கு தேர்தலை அவர் எதிர்கொள்கின்றார்.

தமிழர்,சிங்களவர், முஸ்லிம்கள் என மூவினத்தவர்களும் ஏறத்தாழ சரிசமனாக வாழும் மாவட்டம் அது.

பொதுஜன பெரமுன – சு.க. கூட்டு ஒருபுறம்; ஐ.தே. கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி எனப் பிரிந்து நிற்கும் ஐக்கிய தேசிய முன்னணி பிறிதொரு புறம்; இவற்றுக்கு மத்தியில் இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒன்றுபட்டு நின்ற தமிழர் தரப்பு, முந்திய நிலைமைகளுக்கு மாறாக பல துண்டுகளாகப் பிளவுபட்டு நிற்கும் சூழல்.

இந்த இக்கட்டுடன்தான் தமிழர் தரப்பு இத்தேர்தலைச் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் திருகோணமலையை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிதான் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தது. அடுத்த ஓரிரு ஆண்டுகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றமையை அடுத்து அந்தத் தொகுதியில் ஒரு போட்டி வேட்பாளரைக் காங்கிரஸ் கட்சி தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் நிறுத்தவில்லை.

தமிழர் தேசத்தின் தலைநகரம் திருகோணமலையில் தமிழர் பிரிந்து நின்றால் தமிழர் பிரதிநிதித்துவம் அடிபட்டுப் போகும் என்ற கருத்து நிலையில், இன நலம் கருதிய உயர் பண்பியல்பில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அப்படி நடந்து கொண்டார்.

ஆனால், அவரது மகன் குமார் பொன்னம்பலமும், பேரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதனை மறந்து திருகோணமலையில் வேட்பாளர்களை பல தேர்தல்களிலும் நிறுத்தினர். எனினும் கணிசமான வாக்குகளைத் தன்னும் அவர்களால் இதுகாறும் திரட்ட முடியவில்லை இப்போது இவற்றுக்கு மேலதிகமாக நீதியரசர் விக்னேஸ்வரனின், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி முன்னாள் போராளியான ரூபன் தலைமையில் ஒரு குழுவைக் களமிறக்கியிருக்கின்றது.

இதனால் தமிழர் தலைநகரில் தமிழர்களின் வாக்குகள் பிரிந்து, பிளவுபட்டுப் போகவும், அதனால் அங்கு தமிழரின் பிரதிநிதித்துவமே அடிபட்டுப் போகும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் கரிசனை தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அது குறித்து தமிழ்க் கட்சித் தலைவர்கள் கவலை கொள்பவர்களாகத் தெரியவில்லை.

அப்படி ஆபத்து நேரும் என்றால், சம்பந்தன் விட்டுக் கொடுத்து, ரூபனுக்கு இடமளித்து ஒதுங்கலாம் என்ற ஆலோசனையை ரூபனின் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் முன்வைத்திருக்கின்றார்.

'விக்னேஸ்வரனின் கருத்தை விட்டுவிடுங்கள். மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவார்கள்" என்று சம்பந்தன் கூறியிருக்கின்றார்.

எது எப்படி என்றாலும், ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

திருகோணமலையில் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி முதலாம் இடத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாம் இடத்தையும்,பொதுஜன ஐக்கிய முன்னணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

நான்கே நான்கு ஆசனங்களைக் கொண்ட திருகோணமலையில் தமிழர் தரப்பு தனித்து அதிக வாக்குகளைப் பெற்று முதலாம் இடத்துக்கு வந்தால் போனஸ் ஆசனத்துடன் இரண்டு இடங்களைப் பெற முடியும்.

ஐக்கிய தேசிய முன்னணி இப்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவையாகப் பிளந்து நிற்கின்றமையால் இந்தத் தேர்தலில் மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்று தமிழர் தரப்பு முதலாவதாக வருவதற்கு வாய்ப்புகள் இருந்தன.

ஆனால், தமிழர் தரப்பு பிளவுபட்டு நின்று அந்த போனஸ் ஆசனம் பெறும் அற்புதமான வாய்ப்பையும் கோட்டைவிட்டு, திருகோணமலையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் ஆசனத்தையும் கூட இழக்கும் இழி நிலைமை வரலாம் என்று எச்சரிக்கப்படுகின்றது.

சமரசங்களையும், மீள ஒழுங்குபடுத்தலையும் செய்து கொள்வதற்கான வாய்ப்பும், நேரமும் கடந்து விட்டன.

இனி என்ன? வரும் முடிவை எதிர்கொள்வதைத் தவிர, சுதாகரிப்பதற்கு வேறு வழியே இல்லை. அதுதான் நிஜம்.

# சமஷ்டியை ஒருபோதும் கைவிடவே மாட்டோம்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்



அரசின் எவ்வித மிரட்டல்களுக்கும் நாம் அடிபணியமாட்டோம். சமஷ்டி முறைமையிலான நிரந்தர அரசியல் தீர்வே எமது நோக்கம். அதில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை. அந்த நிலைப்பாட்டிலிருந்து ஒருபோதும் பின்வாங்கவேமாட்டோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

எதிர்வரும் 5ஆம் திகதி வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் ஆணையுடன் மாபெரும் வெற்றியை நிலைநாட்டுவோம். எம்மை விமர்சிப்பவர்களைத் தலைகுனிய வைப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:–

நாம் ஜனநாயக வழியில் தமிழரின் விடுதலைக்காகப் போராடுகின்ற கட்சி. எவரின் மிரட்டல்களுக்கும் அடிபணியமாட்டோம். எந்தச் சலுகைகளுக்கும் விலைபோகமாட்டோம். எமக்குப் பதவி ஆசைகள் எதுவும் இல்லை.

நிரந்தர அரசியல் தீர்வைக் காணவே பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் ஆணை வேண்டி நிற்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள எந்தவொரு விடயங்களும் புரட்சிகரமானவை அல்ல. மக்கள் சமத்துவமாகவும், நாகரிகமாகவும் வாழ்வதற்குமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசமைப்பு ரீதியாக தீர்வு வழங்கப்பட வேண்டும். அதாவது, ஒரேமொழியைப் பேசுகின்ற மக்கள் ஒரே அலகாக வாழ்வதற்கும், ஆட்சி அதிகாரங்கள் மீளப்பெறாத வகையிலும் நிலைத்து நிற்கக் கூடிய வகையிலும் வழங்கப்பட வேண்டும். இவ்விதமான கருமங்கள் நடைமுறைச் சாத்தியமாக்கப்பட வேண்டுமென்றால் சமஷ்டி முறைமையின் அடிப்படையிலேயே அவை சாத்தியமாகும். எனவே, எமது சமஷ்டி முறைமையிலான கோட்பாட்டை மாற்ற முடியாது. சமஷ்டி புரட்சிகர கோரிக்கை இல்லை.

இந்த நாட்டில் சமஷ்டியைக் கோரிக்கையை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவே முதலில் முன்வைத்தார். அதற்கு அடுத்தபடியாக கண்டியத் தலைவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தார்கள். அத்துடன் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் சமஷ்டி அடிப்படையிலான அலகு உருவாக்கப்பட வேண்டும் என்றும் முன்மொழித்திருக்கின்றார்கள்.

துரதிஷ்டவசமாக தமிழ்த் தலைவர்கள் அந்தக் கோரிக்கையை ஆதரித்திருக்கவில்லை. உலகத்தில் சுபீட்சமாக இருக்கும் நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறைமையே உள்ளது. சமஷ்டி என்பது பயங்கரமான விடயமாக கொள்ளப்பட வேண்டியதில்லை. அவ்வாறிருக்கையில் தென்னிலங்கைத் தலைவர்கள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சமஷ்டி என்ற சொல்லை ஆபத்தான சொல்லாகப் பரப்புரை செய்து சிந்தனையைஏற்படுத்திவிட்டார்கள்.பெரும்பான்மை மக்களுக்கு தென்னிலங்கைத் தலைவர்கள் உண்மையைக்கூற வேண்டும்.

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தீர்வு தொடர்பில் அந்த அரசுடன் நாம் முழுமனதுடன் பேசத் தயாராக இருக்கின்றோம். கடந்த தடவை ராஜபக்ஷவினர் தவறிழைத்தார்கள் என்பதற்காக அவ்விதமாக தொடர்ந்தும் செயற்படுவார்கள் என்று கூறுவதற்கில்லை. அவர்கள் ஆட்சிக்கு வருவார்களாக இருந்தால் புதிய ஆரம்பத்தின் மூலம் பேச்சுகளை முன்னெடுப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம். எமது அடிப்படை கோட்பாடுகளில் பற்றுறுதியுடன் நாம் அந்த முயற்சிகளில் ஈடுபடுவோம்.

இலங்கையின் ஆட்சியாளர்கள், இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள். அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்ததந்த பிராந்தியங்களில் வாழ்கின்றவர்கள் தமது விடயங்களைக் கையாள்வதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டு பகிரங்கமாகவும் கூறியிருக்கின்றார். அவ்வாறான நிலையில் கொள்கை ரீதியாக அவர்கள் எம்முடன் முரண்பட்டால் அரசியல் தீர்வுக்காக சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் நாங்கள் முயற்சிகளை எடுப்போம். அதில் வெற்றி பெறுவோம்.

மத்திய அரசில் பங்கேற்று அமைச்சுப் பதவியைப் பெறுவது என்ற முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கவில்லை. அமைச்சுப் பதவியைப் பெறுவதாக இருந்திருந்தால் நாம் கடந்த அரசுகளில் பல்வேறு முக்கிய அமைச்சுக்களைப் பெற்றிருக்க முடியும். அது எமது இலக்கு அல்ல. எமது மக்களின் இறையாண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு சர்வதேச ரீதியாக அவர்களுக்கு உள்ள உரிமைகளின் அடிப்படையில் மீளப்பெறமுடியாத நிரந்தரமான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த இலக்கை வேறு எதற்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது.

அந்த இலக்கை அடைகின்றபோது தேவையேற்படின் ஏனைய விடயங்களையும் நாங்கள் பரிசீலிப்போம். எமது கட்சியின் செயற்குழு, மத்தியகுழு, பொதுச்சபை உள்ளிட்டவை முறையாகக் கூட்டி அது தொடர்பில் தீர்மானங்களை எடுப்போம். தற்போது வரையில் அவ்விதமான எந்த முடிவையும் எடுக்கப்படவில்லை. அவ்விதமாக யாரும் கூறினால் அது தவறாகும் – என்றார்.

# தேர்தலில் வாக்களிக்காது இருப்பது பாவச் செயல்

## சுட்டிக்காட்டுகிறார் ரணில்

கொழும்பு, ஓக 02

தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பது பாவச்செயலாகுமென ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மீகொட பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் இன்று எதிர்க்காலம் தொடர்பாக அச்சமடைந்துள்ளோம். எதிர்ப்பார்ப்புக்கள் இல்லாது போயுள்ளன. எந்தவொரு நம்பிக்கையும் இல்லாதவர்களாகத்தான் மக்கள் காணப்படுகிறார்கள்.

இன்று நாட்டுக்கான அனைத்து வருமானங்களும் இல்லாது போயுள்ளன. நான் பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் 15ஆயிரம் கோடி ரூபா மாத வருமானம் அரசுக்கு வந்தது.

ஆனால், தற்போதைய நிலையில் அது அப்படியே சரிவடைந்துள்ளது. கடந்த மாதம் வெறும் 5 ஆயிரம் கோடி ரூபா மட்டும்தான் வருமானமாக கிடைத்தது.

அரசியல் நிலைமையும் நாட்டில் அப்படிதான் காணப்படுகிறது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு தற்போதைய ஆட்சியாளர்களால் ஒரு போதும் பதில் கூற முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியால்மட்டும்தான் இந்த சவாலை வெற்றிக் கொள்ள முடியும். புதியக் கட்சியை ஸ்தாபிப்பது முக்கியமல்ல. மக்களுக்கு புதிய வாழ்க்கையை வழங்கவேண்டும் –என்றார்.

# கட்சி அலுவலகம் மீது நேற்று பெற்றோல் குண்டுத்தாக்குதல்



வவுனியா, ஓக. 02

வவுனியாவில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு இந்த அலுவலகத்தின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அலுவலகத்தின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அலுவலகத்தில் முன்புற வீதியால் வந்தவர்களே தாக்குதல் நடத்தினர் என அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

மூவர் தாக்குதலை நடத்திவிட்டு ஓடுவதை அயலவர்கள் அவதானித்தனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படாதபோதிலும் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முழுத் தமிழிழரும் ஒன்றுசேர்ந்து ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாக - அசைக்க முடியா - கட்சியாக - பலம் பொருந்திய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகின்றது.

இந்தநிலையில், நாடாளுமன்றத் தேர்தலை நாம் எதிர்கொண்டுள்ளோம். அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பலத்தை ஒரே குடையின் கீழ் - ஒரே சக்தியாக மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எமது அன்புக்குரிய - பாசத்துக்குரிய தமிழ் வாக்காளர் பெருமக்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை ஆயுதங்களாக்கி இந்தப் பலத்தை சர்வதேசத்துக்கு மீண்டும் ஒரு தடவை எடுத்துக்காட்ட வேண்டும். அந்தப் பலம் கடந்த காலங்களைவிட அதிசக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமையன்று வடக்கு, கிழக்கிலுள்ள ஒவ்வொரு தமிழ் வாக்காளரும் இந்தக் கடமையைத் தவறாது செய்ய வேண்டும். அதனூடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிச் செய்தி உலகெங்கும் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

அந்த மாபெரும் வெற்றிச் செய்தியைக் கேட்டு தமிழர்களை மிதித்து ஆள முயலும் சிங்களப் பேரினவாதம் கதிகலங்க வேண்டும். மாற்று அணிகள் ஓடி ஒழிய வேண்டும்.

அந்தச் சரித்திர வெற்றி - தமிழர்கள் ஓரணியில் பெரும் பலத்துடன் நிற்கும் செய்தி சர்வதேச சமூகத்தை விழிப்படையச் செய்ய வேண்டும் - தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற இலங்கை அரசு மீதான சர்வதேச அழுத்தத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். அதன் பிரகாரம் இலங்கை அரசின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும். நியாயமான - நிரந்தமான தீர்வைத் தமிழர்கள் பெறவேண்டும் - என்றார்.

## தனிமைப்படுத்தப்பட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தப்பிச் சென்ற கைதி ஒருவர் களுத்துறை நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய இரு கைதிகளையும் தேடி களுத்துறை வடக்கு பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் இணைந்து கூட்டுச்செயற்பாடுஒன்றைஆரம்பித்துள்ளனர்.

## மஹிந்தவின் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்முல்லபிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு முன்பாக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயங்களுடன் காணப்பட்ட குறித்த பெண், தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## 2 பாடசாலை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரண்டு மாணவர்களும் (வயது- 19) இம் முறை கல்வி பொதுத் தராதார உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற உள்ளவர்கள் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வெலிவேரியா மற்றும் முடுங்கோட பகுதியைச் சேர்ந்த இரு மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622



# மாற்றுத் தலைமையை அடையாளப்படுத்தி தமிழ் மக்கள் ஆணை வழங்கும் தேர்தல் இது

## ஈ.பி.டி.பி. வேட்பாளர் விக்னேஷ் கூறுகின்றார்



மாற்றுத் தலைமையை மக்கள் அடையாளப்படுத்தி ஆணை வழங்கும் தேர்தலாக இது அமைய இருக்கின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் விக்னேஸ் குலரட்ணம் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்கள் அதிகளவில் செறிந்து வாழும் வடக்கு - கிழக்கு பகுதிகளில் இந்தத் தேர்தல் மக்கள் தங்களுடைய மாற்றுத் தலைமைக்கான ஆணையை வழங்குகின்ற ஒரு சந்தர்ப்பமாகவே பார்க்கப்படுகின்றது. மிக முக்கியமாக மக்கள் மாற்று தலைமையை எவ்வாறு தேர்ந்தெடுக்கப் போகின்றார்கள்? அந்த மாற்றுத் தலைமை யார்? - என்கின்ற கேள்விகளுக்கு பதிலாகவே இந்த தேர்தலினுடைய முடிவுகள் அமையப் போகின்றன.

தேசிய நல்லிணக்கத்திற்கு ஊடாக தேசிய அரசியல் நீரோட்டத்திலே இணைந்து ஓர் இணக்க அரசியலை உருவாக்குவதன் மூலம் மக்களினுடைய அரசியல் பிரச்சினைக்கான தீர்வாக இருந்தாலென்ன, தமிழர் பிரதேசத்தினுடைய அபிவிருத்தியாக இருந்தாலென்ன, மக்களினுடைய அன்றாட பிரச்சினைகளாக இருந்தாலென்ன இவற்றையெல்லாம் தீர்த்துக் கொள்ளலாம் என்கின்ற விடயத்தை பல ஆண்டுகளாக எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தி வருகின்றது. அதுவே எங்களின் எங்களினுடைய நீண்ட யதார்த்தமான அரசியல் கொள்கை.

தற்சமயம் ஏனைய தமிழ்க்கட்சிகளும் இதனை நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏற்றுக்கொண்டிருக்கின்றமையை இந்த தேர்தலிற்கான அவர்களின் தயார்ப்படுத்தல்களில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால் ஏனைய கட்சிகளில் இருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி எவ்விதமாக வேறுபடுகின்றது என்றால், ஏனையவை இன, மத முரண்பாடுகளை உட்புகுத்தி முரணான அரசியல் கொள்கைகளை முன்னிறுத்தியே மக்களிடம் வாக்குகளை கேட்கின்றன. ஆனால், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அதன் 25 வருட கால அரசியல் பயணத்தில் மிக நிதானமாக தேசிய நல்லிணக்கத்தின் மூலமே சாதிக்க முடியும் என்கின்ற நம்பிக்கையினை வலியுறுத்தி வந்துள்ளது. அந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறு இலங்கையின் மத்தியில் அமைய இருக்கின்ற ராஜபக்ஷ அரசோடு நேரடியாக பேச்சுகள் மேற்கொண்டு மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத்தரும் வல்லமைமிக்க கட்சியாக இன்று எமது கட்சி பார்க்கப்படுகின்றது.

உண்மையிலே நகைப்புக்குரிய விடயம் என்னவெனில், இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்ற - குறிப்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தவிர்ந்த - ஏனைய கட்சிகள் தாங்கள் இந்தத் தேர்தலில் மிகப் பெரும் வெற்றியை பெறப்போகின்றன எனவும் அத்துடன் அரசாங்கத்துடன் இணைந்து தாம் செயற்பட போகின்றார்கள் எனவும் ஒரு மாயையை மக்கள் மத்தியில் உருவாக்கியமைதான். அது மட்டுமல்லாமல் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதற்கான சூழல் தங்களிடமே இருப்பதாகவும் கூறித் தவறான போலிப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இதில் சில அரசியல்வாதிகள் மக்களுக்குக் காணிகளை பெற்றுத் தருவார்கள் எனவும், வீடமைப்பு திட்டங்களுக்கான நிதியுதவிகளை வழங்குவதாகவும் கூறி வெவ்வேறு விதமான போலி வாக்குறுதிகளை அளித்து வருகின்றார்கள்.

மத்தியில் அமைய இருக்கும் அரசாங்கத்தோடு இணைந்து செயற்படக்கூடிய வல்லமை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை தவிர்ந்த வேறெந்த கட்சிக்கும் இல்லை என்பதே வெளிப்படை உண்மையாகும். அந்த வகையிலே ஏனைய கட்சிகள் எவ்வாறு அவர்களுடைய போலி வாக்குறுதிகளை நிறைவேற்றப் போகின்றன என்பதில் மக்களாகிய நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

தங்களைத் தமிழ் மக்களினுடைய ஏகபிரதிநிதிகள் எனக் கூறிக் கொண்டு தங்களுக்கென ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரல் இன்றி அந்நிய சக்திகளினுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்றவாறு செயற்பட்டு வருகின்ற ஒரு சில கட்சிகளின் பிரதிநிதிகள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பால் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாமல் எமது கட்சி மீது சேறு பூசுவதற்காகவும் தேர்தல் பிரச்சார இறுதி காலப் பகுதியிலே பல்வேறு குற்றச்சாட்டுக்களை எம்மீது அரங்கேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதற்காக சில முகவர்களிடம் பேரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதும் எங்களால் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கின்றது.

தற்சமயம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறிய ஒரு விடயம் பத்திரிகைகளில் பரவலாக வெளிவருகின்றது. புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும், அதில் சர்வதேச சமூகம் ஆர்வத்துடன் இருக்கின்றது எனவும் அவரால் கூறப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தங்களுடைய இருப்பைத் தக்க வைப்பதற்காகவும், கடந்த காலங்களில் தாம் விட்ட தவறுகளை மறைக்கவும் இவ்வாறான விடயங்களை முன்வைக்கின்றனர்.

குறிப்பாக சர்வதேச சமூகம் தமிழர்களின் பிரச்சினையில் எவ்வளவு தூரம் ஆர்வமாக இருக்கின்றது என்பது கேள்விக்குரிய ஒன்றாகும்.

அதுமாத்திரமல்ல, சர்வதேச சமூகத்தினுடைய விருப்பத்திற்காக நாங்கள் அரசமைப்பிலே மாற்றங்களைக் கொண்டு வருதலோ அல்லது புதிய அரசியல் யாப்பொன்றினை உருவாக்குதலோ தற்சமயம் தேவையற்ற ஒன்றாகும். அவ்வாறாக இந்த விடயம் நிகழ்வதாக இருந்தாலும் கூட சுமார் 10 வருடங்களுக்கு மேல் கூட ஆகலாம்.

ஆனால் எங்களுடைய பிரச்சினை தற்பொழுது இருக்கின்ற அரசியல் முறைமைகளைப் பலப்படுத்தி, அவற்றுக் கூடாக சாதகமான வழியில் தமிழர்களுக்கான சிறந்த அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுப்பதே ஆகும். ஆகவே அதற்குரிய வழிமுறைகளையே நாம் பின்பற்ற வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், தமிழர் பிரதேசங்கள் பொருளாதார ரீதியிலே மிகவும் பாதிப்படைந்து காணப்படுகின்றன. அந்த பிரதேசங்களிலே அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கான சூழல் தொடர்பில் ஆராய வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். அதனை விடுத்து காலத்தை கடத்துவதற்காகவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்று அரசியல் இருப்புக்களை தக்கவைத்து கொள்வதற்காகவும், மத்தியில் இருக்கும் அரசாங்கம் ஏற்க மறுக்கும் கொள்கைகளை முதன்மைப்படுத்திக் கதைப்பதும், மக்கள் மத்தியிலே இனத்துவேசமான கருத்துக்களை முன்வைத்து வாக்குக்களை பெற முயல்வதும் சுயலாப அரசியலின் வெளிப்பாடாகும்.

இக்கட்சிகள் தமது கடந்தகாலச் செயற்பாடுகளையும், அதே வழிமுறைகளையும் இந்தத் தேர்தலிலும் பின்பற்ற நினைக்கிறார்கள் என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாக இருக்கின்றது. ஆனால் எங்களுடைய ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் அரசியல் கோணம் முற்றுமுழுதாக வேறுபட்டதாகவும், யாதார்த்தமானதாகவும் இருக்கின்றது என்பதே உண்மையாகும்.

எதிர்காலத்திலே ஏனைய தமிழ் அரசியல் தலைமைகள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியோடு அணி திரண்டு பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உருவாக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# கழுத்தில் ஹெரோயின், சிம் மெமரி கார்ட்டுடன் பூனை!



கொழும்பு, ஓக 02

வெலிக்கடை மெகசின் சிறைச்சாலைக்குக் ஹெரோயின் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் பூனையொன்று மீட்டுள்ளது எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைக்கு முன்னால் கழுத்தில் ஏதோ சிறு பொதியொன்று கட்டப் பட்டிருந்த பூனையொன்றை அவதானித்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர், அதனைப் பரிசோதித்தபோது, அதில் 1.7 கிராம் ஹெரோயின் இருப்பது தெரியவந் துள்ளது.

மிகச் சூட்சுமமாக பொதி செய்யப்பட்ட குறித்த சிறிய பொதியில் 2 சிம் அட்டை கள் மற்றும் மெமரி அட்டை ஆகியன காணப்பட்டன என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகளுக்காக குறித்த பூனை, பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பூனை ஒன்றைப் பயன்படுத்தி இதுபோன்ற முயற்சி மேற்கொள்ளப்பட் டுள்ளமை தெரியவந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

சம்பவம் குறித்து சிறைச்சாலைகள் திணைக்களம், பொரளைப் பொலிஸா ருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது எனச் சந்தேகிக்கப்படும் கழுகொன்றைப் பொலிஸார் அண்மையில் மீட்டிருந் தனர்.

அந்தக் கழுகு, பாதாளக் குழுவொன்றின் தலைவராகக் கருதப்படும் அங் கொட லொக்கா என்பவருக்குச் சொந்தமானது எனப் பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில், அதனை மிருகக்காட்சிச் சாலையில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் மற்றும் நூற்றுக்கணக் கான கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அது தொடர்பில் விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டன.

இதில், சிறைச்சாலைக்கு வெளியிலிருந்து இவ்வாறான பொருள்கள் வீசப்படுவது கண்டறியப்பட்டதோடு, அது தொடர்பில் பல சந்தேகநபர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டு, கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, கைதிகளுக்கு வசதிகள் மற்றும் உதவிகள் புரிந்தமை தொடர்பில் நீர்கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகள் நால்வருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் அதில் மூவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# மூன்றே மூன்று வாக்காளர்களுக்காக தனியாக ஒரு வாக்கெடுப்பு நிலையம்







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றே மூன்று வாக்காளர்களுக்காக ஒரு வாக்கெடுப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை மட்டக்களப்பு வாவியின் நடுவே மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு மேற்காக அமைந்துள்ள தீவில் உள்ளது. இது பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டதொழுநோய் வைத்திய சாலையாகும்.

தொழுநோய் வைத்தியசாலையில் சுமார் 200 பேர் வரை தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய வசதிகளை கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. அங்கு வேலைசெய்யும் ஊழியர்கள் தங்கியிருக்கும் விடுதிகள், வணக்க தலங்கள் எனப் பல வசதிகளும் இருந்துள்ளன.

மாந்தீவில் 2009 ஆம் ஆண்டு பாரிய தீ அனர்த்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது அப்போது 13 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளனர். அங்கு தீ அனர்த்தத்தின் பின்னர் வைத்தியசாலை சரியான பராமரிப்பு இன்றி மூன்று பேர் தவிர அனைவரும் சென்றுவிட்டனர். அதில் தற்போதுள்ளவர்களின் வாக்குகள் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் பதியப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படுகின்றது.

இவர்களுக்கான வாக்குப் பெட்டி இயந்திரப்படகு மூலம் மாந்தீவு வாக்கெடுப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி திருமதி கலாமதி பத்மராஜா தெரிவிதார்.

மூன்று வாக்காளர்களுக்கும் பொதுவான நியமங்களே கடைப்பிடிக்கப்படவுள்ளன எனவும் வழமையான வாக்களிப்பு நேரமாகிய 7.00 மணிக்கு முதல் 5.00 மணிவரை வாக்களிக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழினத்தின் அரசியல் இன்று வஞ்சகத்தினுள் மூழ்கியுள்ளது

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் கண்ணன் பெருவிசனம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஓக.02

தலைவரின் வழிகாட்டலில் நேரான வழியில் சென்ற எம் இனம் தற்போது வஞ்சகம் நிறைந்த அரசியலில் மூழ்கியுள்ளது. கடந்த காலங்களில் ஆயுததாரிகளாக செயற்பட்ட நாங்கள் தற்போது அரசியல் ரீதியாக செயற்பட ஆணைகோருகின்றோம் எனத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் கண்ணன் தெரிவித்தார்.



யாழ் ஊடக மன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் எங்களுக்கான அதிகாரங்களை கேட்டுநிற்கின்றோம். கடந்த காலங்களில் தமிழ் தலைமைகளின் பிழையான செயற்பாடுகளால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். நாங்கள் மக்களுடன் கலந்துரையாடிய போது மக்களின் விரக்தி மனநிலை தெளிவாக புரிகின்றது.

அனைத்து தரப்பினரையும் ஒன்றாகச் செயற்படுமாறு அரசியல் தலைமைகள் கூறுகின்றனர். நாமும் அதை வரவேற்கின்றோம். ஆனால் அரசியல் தலைகள் பிரிவினைகளை பேசி பிரிந்து நிற்கவே விரும்புகின்றனர். எனினும் நாம் அனைத்து முன்னாள் போராளிகளையும், அனைத்துக் கட்சிகளையும் ஒருமித்து ஒன்றாக முன்னோக்கி செல்லத் தயாராக உள்ளோம்.

புலம்பெயர் தமிழர்கள் பயமின்றி இங்கே முதலீடுகளை செய்ய வேண்டும். பாரிய முதலீடுகளை மேற்கொள்ளாது விட்டாலும் சிறு சிறு முதலீடுகளை மேற்கொண்டு வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தினை வழங்கி உதவ முன்வர வேண்டும்.

எங்களுடைய விடுதலைப் போராட்டத்தில் ஒரு வியர்வையைக்கூட சிந்தாதவர்களே எமது அரசியல் தலைமைகளாக உள்ளனர். போராளிகளையும் போராளிக் கட்டமைப்பினையும் வஞ்சகம் செய்பவர்கள் நிறுத்த வேண்டும். போராளிகள் பெரும் தியாகங்களைப் புரிந்தவர்கள். போராளிகளைப் பற்றி கதைப்பதற்கு தலைவருக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. தாங்கள் தளபதிகள் என கூறிக்கொண்டு போராளிகளைப் பற்றிக் கதைப்பவர்கள் தமிழினத்தின் துரோகிகளாகக் கருதப்பட்டு நிராகரிக்கப் படுவார்கள்.

விடுதலைப் புலிகளின் முகவரியுடன் போராட்டத்தில் ஈடுபட்ட நாம் இப்போது தமிழ் மக்களின் முகவரியுடன் தேர்தலில் களமிறங்கியுள்ளோம். தமிழர்கள் உரிமையையும் பொருளாதாரத்தையும் ஒரு சேர மீட்க வேண்டும். தமிழர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். – என்றார்.

# கூட்டமைப்புக்காகக் கூல் தேர்தலையே குழப்புவார்

## அங்கஜன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஓக. 02

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆதரவினால் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக இணைந்துகொண்ட ரட்ணஜீவன் கூல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காகத் தேர்தலையே குழப்பி விடுவார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதன்மை வேட்பாளரான அங்கஜன் ராமநாதன் அச்சம் வெளியிட்டுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார் .

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் ஒருவரின் பத்திரிகை என் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவித்து வரும் நிலையில் அதற்குச் சார்பாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகக் கடமையாற்றும் உறுப்பினர் ஒருவரும் உடந்தையாக உள்ளார்.

என்மீது சுமத்தப்பட்டுள்ள தேர்தல் விதிமுறை குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக மாவட்ட செயலகத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சுயாதீன விசாரணை இடம்பெற்றது .

விசாரணைகள் முடிவடைந்த நிலையிலும் விசாரணை தொடர்பில் ஏன் இதுவரை அறிக்கை வெளியிடப்படவில்லை?

என் மீது குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டால் விசாரணை அறிக்கையை உடனடியாக வெளியிடுங்கள் பார்க்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் செல்வாக்கு சரிந்து உள்ள நிலையில் எமக்கான மக்கள் செல்வாக்கு அதிகரித்துள்ள நிலையில் அதனை பொறுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அவர்களின் அடிவருடிகள் மூலம் எம் மீது சேறு பூசும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகவே இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் மாற்றத்திற்காக வாக்களிக்க முன் வந்துள்ள நிலையில் என்னை அரசியல்வாதியாக வெற்றியடைய செய்யாமல் மாற்றத்திற்கான மக்களில் ஒருவனாக வெற்றியடைய வையுங்கள் – என்றார்.

# ஊடகவியலாளர் நிலக்சனின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல்

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவர் தலைவரும் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்ட முன்னாள் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட ஊடகத்துறை மாணவனுமான ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட நிலக்சனின் குடும்பத்தினர், உறவினர்கள், பாடசாலை நண்பர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இலானின் படத்துக்கு மலர் மாலை அணிவித்தும், தீபங்கள் ஏற்றியும், மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஊடகத்துறையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சன் கடந்த 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

அன்று அதிகாலை வேளை யாழ். கொக்குவில், ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அவருடைய வீடு இராணுவப் புலனாய்வாளர்களினாலும், இராணுவ ஒட்டுக்குழுவினராலும் முற்றுகையிடப்பட்டது.

வீட்டில் இருந்த நிலக்சனை விசாரிக்க வேண்டும் என்று கூறிய ஆயுதக் குழுவினர் வீட்டு வாசலில் அவரை அழைத்து விசாரித்தனர். இதன்போது நிலக்சனின் தந்தை, தாய் மற்றும் சகோதரன் ஆகியோர் கண் முன்னால் அவரை சுட்டுப் படுகொலைசெய்த ஆயுதக் குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

நிலக்சன் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 13 வருடங்கள் நிறைவடைந்துள்ளபோதிலும் குற்றவாளிகள் எவரும் இதுவரைக் கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.






# இலங்கை உட்பட 31 நாடுகளுக்கான வர்த்தக விமானங்களுக்கு குவைத் தடை

கொழும்பு, ஓக.02

கொரோனா வைரஸ் பரவும் இலங்கை உட்பட அதிக ஆபத்தான 31 நாடுகளுக் கான வர்த்தக விமானங்களுக்குக் குவைத் தடை விதித்துள்ளது.

குவைத் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் இந்தத் தகவலை வெளியிட் டுள்ளன.

இந்தப் பட்டியலில் இந்தியா, பாகிஸ் தான், எகிப்து, பிலிப்பைன்ஸ், லெபனான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உள்ள டங்குகின்றன.

இந்த அனைத்து நாடுகளையும் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டவர்கள் குவைத்தில் பணி புரிந்து வருகின்றனர். இந்த பட்டியலில் சீனா, ஈரான், பிரேசில், மெக்ஸிகோ, இத்தாலி மற்றும் ஈராக் ஆகிய நாடுக ளும் உள்ளடங்கும்.

குவைத் நாட்டில் வர்த்தக விமானங் கள் ஓரளவு மீண்டும் இயங்க தொடங்கிய அதே நாளில் இந்தத் தடை அறிவிக் கப்பட்டது.

குவைத் சர்வதேச விமான நிலையம் நேற்று முதல் சுமார் 30 சதவீதம் இயங் கும் என அதிகாரிகள் கூறியுள்ளனர், எதிர்வரும் மாதங்களில் இந்த நடவடிக்கை படிப்படியாக குறைவடையும் என குறிப் பிடப்படுகின்றது.

குவைத்தில் 67,000 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட் டுள்ள நிலையில் 500 பேர் வரையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு நகரில் வீதிப்பவனியாக பிரச்சாரத்தில் ஈடுபட்ட 13 பேர் கைது

## 7 மோ.சைக்கிள்கள், 4 வான்களும் மடக்கப்பட்டன

மட்டக்களப்பில் தேர்தல் விதிமுறை களை மீறி வீதியில் வாகனங்களில் பிரச் சார நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் 13 பேரை நேற்று சனிக்கிழமை கைது செய்தத யையுடன் 4 டொல்பின் ரக வான்கள் மற்றும் 7 மோட்டர் சைக்கிள்களையும் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட் பாளர் சாணக்கியன் தலைமையில் கட்சி ஆதரவாளர்கள் நேற்றுக் காலை 9 மணி யளவில் மட்டக்களப்பு, திருகோணமலை வீதியில் வாகனங்கள் மோட்டர் சைக்கிள் களில் பவனியாகப் பிரச்சார நடவடிக்கை யில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத் தினர் எனக் கூறப்படுகின்றது. அச்சம யம் பொலிசாருக்கும் பிரச்சார நடவடிக் கையில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டதையடுத்து அங்கு சிறிது பதற்றம் ஏற்பட்டது.

இந்த நிலையில் பிரச்சார நடவடிக்கை யில் ஈடுபட்ட 13 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். ஏனையோர் வாகனங் கள் மற்றும் மோட்டர் சைக்கிள்களை விட் டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இதனையடுத்து 4 வான், 7 மோட்டார் சைக்கிள் களைப் பொலிஸார் மீட்டனர். கைது செய்யப்பட்ட வர் களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# முற்கூட்டியே ஓய்வு பெறுகிறார் தேர்தல் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, ஓக.02

பதவிகாலம் முடிவடைவதற்கு முன் னரே தேசிய தேர்தல் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசபிரிய ஓய்வு பெறப்போகிறார் என அறிவித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இவரின் பதவிக்காலம் இவ்வருடம் நவம்பர் 12 ஆம் திகதியே முடிவ டைகின்றது. எனினும் செப்டெம்பர் மாதமே அவர் பதவியில் இருந்து வில குவார் என அறிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவியில் இருந்து விலகுவதற்கு மஹிந்த தேசப்பிரிய தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் 37 வருடங்கள் தேர்தல் பணி களில் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர். அவ்வாறாயின் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலே மஹிந்த தேசபிரியவின் இறுதி தேர்தல் பணியாகக் கூட அமையலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்கள் மத்தியில் கூட்டமைப்பினர்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஓக.02

'தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் ஆதரவாளர் வட்டத் தின்' ஏற்பாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வடக்கு முஸ்லிம் சமூகத்தின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று யாழ்ப் பாணம் பிள்ளையார் இன் தனி யார் விடுதியில் இடம்பெற்றது.

இப் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர்களான மதியாபரணம் சுமந்திரன், வேத நாயகம் தபேந்திரன், குருசாமி சுரேந்திரன், இமானுவேல் ஆனோல்ட், சிவஞானம் சிறிதரன், சசிகலா ரவிராஜ், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரம், கட்சி ஆதரவாளர் கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# இன்று நள்ளிரவுடன் முடிகின்றது பிரசாரம்

பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கை கள் இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

அதன்படி பொதுத் தேர்தல் தொடர்பான கூட்டங்களை நடத்துதல், வீடு வீடாகச் செல்லு தல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், விளம்பர பலகைகளைக் காண்பித்தல், சுவரொட் டிகளைக் காண்பித்தல், தேர்தல் தொடர்பான விளம்பரம் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் அனைத்திற்கும் இன்று நள்ளிரவுக்குப் பின்னர் தடை விதிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இன்று நள்ளிரவுக்குப் பின் ஆரம்பமாகும் அமைதிக் காலத்தில், எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடாது, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த அனைவரும் ஆதரவளிக்க வேண்டு மென அந்த ஆணைக்குழு கோரிக்கை விடுத் துள்ளது.

இதேவேளை, பிரசாரங்கள் இன்றுடன் நிறை வடைவதை முன்னிட்டு பிரதான அரசியல் கட்சி கள் தங்களின் இறுதிப் பிரசாரக் கூட்டங்களுக் கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இதற்கமைய, ஸ்ரீலங்கா பொதுஜன முன்ன ணியின் இறுதிப் பிரசாரக் கூட்டம், அதன் தலை வர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலை மையில், தங்காலை – கால்ரன் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பிரசாரக் கூட்டம், கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று மாலை மருதானை – டீன்ஸ் வீதியில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் அதன் தலைவர் சஜித் பிரேம தாச தலைமையில் இன்று மாலை கொழும்பு – புதுக்கடை பகுதியில் இடம்பெறவுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் இறுதி பிரசாரக் கூட்டம். அதன் தலைவர் அநுரகுமார திஸாநா யக்க தலைமையில், புதுக்கடை ஜும்மா மஸ் ஜித் வீதிப் பகுதியில் இடம்பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# விக்னேஸ்வரனின் கதை எனக்குத் தேவையில்லை மக்கள் தீர்மானிப்பார்கள் என்கின்றார் சம்பந்தன்!



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை,ஓக.02

விக்னேஸ்வரனுடைய கதை எனக்கு தேவையில்லை. மக்கள் தீர்மானிப்பார்கள் – எனத் தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் இன்று மகளிர் அணியினர் ஏற்பாடு செய்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட சமயம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில ளிக்கும் போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களையும் வடக்கு கிழக்கில் 20 ஆசனங்களை உறுதியாக பெறும் எனவும் இரா சம் பந்தன் இதன்போது தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட கிழக்கில் பெரும்பான் மையான ஆசனங்களைப் பெறுவது உறுதி எனவும், வெற்றி பெற்று இலங்கையினுடைய தேசிய அரசியலில் மீண்டும் எதிர்க்கட்சி ஸ்தானத்துக்கு வரும் வல்லமை பெறும் என்பது உறுதியாக நம்பப்படுகின்ற ஒரு விய மாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியல் சாசனம் ஒன்று உரு வாக்கப்படவேண்டும். ஜனாதிபதியின் அதி காரங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவும் அந்த அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண் டும் என்பதில் நாங்கள் நம்பிக்கையில் உள்ளோம். நாங்கள் அரசியல் சாசனம் தீர்வை அடைவதற்கு உரிய வாசலில் நின்று கொண்டிருக்கிறோம்.

அந்தத் தீர்வு அடுத்த நாடாளுமன்றத் தில் எங்களுக்கு கிடைக்கும் என்பதில் மிகத் திடகாத்திரமான உறுதியுடன் நாங் கள் இருக்கின்றோம்.

5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் அனைத்து தமிழ் மக் களும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப் பதன் மூலம் திருகோணமலையில் இரண்டு ஆசனங்க ளைப் பெறவேண்டும் எனவும் இரா சம்பந்தன் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.



# ஷானி அபேசேகர வைத்தியசாலையில்


கொழும்பு, ஓக 2

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன் னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மஹர சிறைச்சாலை வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார். சுகயீனம் காரணமாகவே அவர் இவ்வாறு வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளாரென கூறப்படுகிறது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன் னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கடந்த வெள்ளி கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டு காரணமாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கடந்த ஜனவரி மாதம், உடன் அமுலுக்கு வரும் வகை யில் பணி நீக்கப்பட்டு, காலி பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பிரத்தியேக உதவியாளராக நிய மிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


பாராளுமன்றத் தேர்தல் - 2020
"எங்கள் தமிழர் தேசமக்கள்
விடிவுக்காக விடுதலைக்காக
அர்ப்பணித்தவர்
உண்மை,
நேர்மை,
தியாகம்"
X8
மாவை.சோ.சேனாதிராசா
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

# தமிழர்களுக்கான தீர்வை ஐ.தே.க. அரசே வழங்கும்!

## யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் பிரத்தியேக செவ்வி

ராஜபக்ஷவினரின் தரப்பு உட்பட தென்னிலங்கை கட்சிகள் பேரினவாதத்தை வெளிபடுத்தி வருகின்ற நிலையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கவினால் மட்டுமே தமிழர்களுக்கான நியாயமான அரசியல் தீர்வையும் அபிலாகைளையும் பூர்த்தி செய்ய முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் தெரிவித்தார்.

அச்செவ்வியின் முழுவடிவம் வருமாறு,

**கேள்வி:-** யாழ்.தேர்தல் களத்தில் தேசியக் கட்சிகளை நிராரிக்க வேண்டுமென்ற கோஷம் மேலெழுந்தமையானது உங்களின் வெற்றிக்கு குந்தகமாகியுள்ளதா?

**பதில்:-** முதலாவதாக, யாழ்ப்பாணத்தில் எனது வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட மக்கள் கடந்த காலத்தைப் போன்று எம்முடனேயே கைகோர்த்திருக்கின்றனர். ஆகவே, இந்தக் கோசங்கள் தோல்வியின் விளிம்பில் உள்ளவர்களால் வெளிப்படுத்தியவையாகவே கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியானது கடந்த இரு தசாப்தங்களாக யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தனது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியே வருகின்றது. 2000ஆம் ஆண்டு எனது கணவர் மகேஸ்வரன் முதன்முதலாக ஐக்கிய தேசியக் கட்சியில் களமிறங்கியிருந்தார். 2000ஆம் ஆண்டு மற்றும் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் அவர் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்றிருந்தார். பின்னர் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கொழும்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

அவரது மறைவையடுத்து 2010ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டிருந்தேன். மக்கள் என்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்திருந்தனர். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் நான் முன்னரைவிட அதிகூடிய வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தேன். கடந்த நான்கரை வருடங்கள் நல்லாட்சி அரச காலத்தில் குடாநாட்டு மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கியிருந்தேன். ஆகவே, எனது சேவைகளை மக்கள் அங்கீகரிப்பது நிச்சயமானது. இவ்வாறான வெற்றுக்கோசங்களுக்குள் அவர்கள் விலைபோக மாட்டார்கள்.

**கேள்வி:-** சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினர் கட்சியிலிருந்து வெளியேறி தனித்துப் போட்டியிடுகின்றமையானது பின்னடைவுகளை ஏற்படுத்துவதாக இல்லையா?

**பதில்:-** சிறுகுழுவினரே வெளியேறிச் சென்றிருக்கின்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சியானது மூவினமக்களையும் அரவணைத்து ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சியாகும். அதற்கென்ற பாரம்பரியங்களும், கொள்கைகளும் தனித்துவமானவை. ஆகவே, சிறுகுழுவினரின் வெளியேற்றம் ஆலமரமாக இருக்கும் ஐ.தே.கவை ஒருபோதும் பாதிக்காது. அதேபோன்று வடக்கிலும் எந்தவிமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அதுபற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்ளவும் தேவையில்லை.

**கேள்வி:-** ராஜபக்ஷ தரப்பினர் பதவிக்கு வந்து ஏழு மாதங்களாகின்ற நிலையில் தற்போதைய ஆட்சி தொடர்பில் தங்களின் பார்வை எவ்வாறாகவுள்ளது?

**பதில்:-** போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரும் கூட போர்க்கால சூழல் வாழ்வதைப் போன்றே கடந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தமிழ் மக்கள் வாழ்ந்தனர். பின்னர் 2015இல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சியில் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக வெளியின் காரணமாக சிறுபான்மை மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் அச்சமின்றி நிம்மதியாக வாழ்ந்து வந்தனர்.

ஆனால், தற்போது அந்த நிலைமை முழுவதுமாக மாறியுள்ளது. இறுதிப் போரின்போது உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டு ஜனநாயக விழுமியங்கள் பின்பற்றப்படாதவொரு சூழலே ஏற்பட்டிருக்கின்றது. விசேடமாக வடக்கில் சிவில் நிர்வாகத்துக்குப் பதிலாக படையினரே வடக்கில் நிர்வாகத்தை நடத்துவது போன்ற நிலைமைதான் உள்ளது.

**கேள்வி:-** கடந்த ஆட்சிக்காலத்திலும் வடக்கு, கிழக்கில் படையினரின் பிரசன்னம் காணப்பட்டதே?

**பதில்:-** போர் இடம்பெற்ற பகுதிகளில் தேசிய பாதுகாப்பின் நிமிர்த்தம் படையினர் நிலை கொண்டிருந்தனர். ஆனால், மக்களின் நடமாடும் சுதந்திரத்தைப் பறிக்கவில்லை. அச்சமூட்டும் அடக்குமுறைகளை மேற்கொள்வில்லை. ஆனால், தற்போது நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளன.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ஏ - 9 பாதையில் புதிதாக சோதனைச் சாவடிகள் முளைத்துவிட்டன. முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வீடுகளுக்கு முன்னறிவிப்புக்கள் இன்றி இராணுவம் நேரடியாகச் செல்கின்றது. விசாரணை என்ற பெயரில் அவர்களை அச்சமூட்டுகின்றது. வடக்கு சீருடை, சிவில் உடை தரித்த படைகளால் நிறைந்துள்ளது.

**கேள்வி:-** கடந்த ஆட்சிக்காலத்தில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு வழங்கப்படுமெனக் கூறினாலும் அது நடைபெறாது காலங்கடத்தப்பட்டுள்ளதல்லவா?

**பதில்:-** அவ்வாறு இல்லை. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பல்வேறு தளங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பொறுப்புக்கூறலை மையப்பபடுத்தி நிலைமாறுகால நீதிப்பொறிமுறைகள் முன்னகர்த்தப்பட்டன. பொருளாதாரத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன. புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு இடைக்கால அறிக்கை வரையில் சென்றிருந்தது.

இருப்பினும் அந்தச் செயற்பாடுகளுக்கெல்லாம் ராஜபக்ஷவினரும், பின்னர் கூட்டரசைக் கலைத்து அவருடன் இணைந்து கொண்ட மைத்திபால சிறிசேனவும் திட்டமிட்டு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தினர். தென்னிலங்கையில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இனவிரோதியாகச் சித்தரித்து பிரசாரங்களை மேற்கொண்டனர்.

இத்தகைய நெருக்கடியான நிலைமைகள் இருந்தபோதும் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாதுள்ளது. அதற்குரிய தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதனைப் பகிரங்கமாகவும் தெரிவித்து வந்தார்.

தற்போதுகூட, ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐ.தே.க.வினாலேயே தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு வழங்கப்படும் என்பது உறுதியான விடயமாகின்றது. ஆகவே, ஐ.தே.க. ஆட்சி உருவாகுவதில் தமிழ் மக்களும் பங்காளியாக வேண்டும். எனவேதான் வடக்கிலிருந்து ஐ.தே.கவின் பிரதிநிதித்துவங்கள் பலமாக நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டியமை இன்றியமையாததாகின்றது. இதனைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி:-** வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட பல கட்சிகள் பிரிந்து போட்டியிடுகின்றன. இதனால் ஐ.தே.கவின் யாழ்.மாவட்ட பிரதிநிதித்துவம் பாதிக்கப்படுமா?

**பதில்:-** தமிழ்த் தலைமைகள் இவ்வாறு பிளவுபட்டமை கவலைக்குரிய விடமாகும். அரசியலுக்காக இவ்வாறு பிளவுபட்டவர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் நலன்களை மேம்படுத்தும் வகையில் செயற்படப் போகின்றார்கள் என்றொரு கேள்வி எழுகின்றது. ஆகவே, தமது அரசியல் சுயநலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட்டால் அது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்குப் பாதகமாகவே அமையும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பிரிந்து நின்று போட்டியிட்டாலும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். ஆனால், ஏனைய பகுதிகளில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்குப் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையில் ஜனாதிபதியும் அரசாங்கமும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிப்பதற்கும் பிரிவினைகளை ஏற்படுத்தவதற்கும் முனைந்து வருகின்றார்கள். அத்தகையதொரு நிலையில் இவ்வாறான பிளவுகள் அரசாங்கத்தின் நோக்கத்துக்குச் சாதமாகவே அமைந்துவிடும் ஆபத்துள்ளது.

> தற்போதுகூட, ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐ.தே.க.வினாலேயே தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு வழங்கப்படும் என்பது உறுதியான விடயமாகின்றது. ஆகவே, ஐ.தே.க. ஆட்சி உருவாகுவதில் தமிழ் மக்களும் பங்காளியாக வேண்டும். எனவேதான் வடக்கிலிருந்து ஐ.தே.கவின் பிரதிநிதித்துவங்கள் பலமாக நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டியமை இன்றியமையாததாகின்றது.

மேலும் கடந்த காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள் என்ற வருகின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து குரல் கொடுத்திருக்கின்றேன்; செயற்பட்டிருக்கின்றேன். அவ்விதமாக கட்சி ரீதியான வேறுபாடுகளைத் தவிர்த்து மக்களை மையப்படுத்திய பொது வேலைத் திட்டங்களில் ஒன்றிணைய வேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது.

**கேள்வி:-** ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிகளான ஈ.பி.டி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி உள்ளிட்டவை தனித்துக் களமிறங்கியுள்ளமை தேசிய கட்சியான ஐ.தே.கவுக்கு குடாநாட்டில் சவாலாக இல்லையா?

**பதில்:-** இவை அனைத்துமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. தேர்தல்களில் இத்தகையவர்கள் போட்டியிட்டாலும் அனைவரும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு முண்டுகொடுப்பவர்களாகவே இருப்பார்கள். பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு அமையவே இவர்கள் தனித்தனியாகக் களமிறக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் ராஜபக்ஷவினரின் முகவர்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.




சிறந்த தலைமை பண்புள்ள அதிபர்
-அதிபருடன் பணியாற்றிய ஆசிரியர்கள்
6
2
க.அருந்தவபாலன்
B.A(Hons)(Econ), M.Ed, PGDE, PGDEM
ஓய்வுநிலை அதிபர்
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

# எனக்கு வாக்களிக்க விரும்பாவிடின் உங்கள் அடுத்த தெரிவு சம்பந்தனே!

## திருகோணமலையில் மூவின மக்கள் முன் 'மொட்டு'வின் வேட்பாளர் அதிரடிக் கருத்து

திருமலை, ஓக. 02

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் போட்டியிடும் எனக்கு நீங்கள் வாக்களிக்க விரும்பாத பட்சத்தில் உங்களுக்கு இருக்கும் அடுத்த ஒரேயொரு தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்தார்.

திருகோணமலையில் மூவின மக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் மக்களுக்கான சேவையைத் தொடர்வதற்கான அங்கீகாரத்தைக் கோரி நிற்கின்றேன். சிலவேளைகளில் எனக்கு நீங்கள் வாக்களிக்க விரும்பாதிருப்பீர்களானால் உங்களது அடுத்த தெரிவாக சிரேஷ்ட அரசியல்வாதியான சம்பந்தனாகவே இருக்க வேண்டும்.

அவர் எனது தந்தை புஞ்சிநிலமேயின் நெருங்கிய நண்பர். அவர்கள் இருவரும் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது இந்த மாவட்டத்திலிருந்து ஒன்றாக நாடாளுமன்றத்துக்குச் சென்றவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, அவர்களின் நீண்ட மக்கள் சேவையும், அரசியல் அனுபவமும் இன்றியமையாததவொன்றாக உள்ளது.



சம்பந்தனும், எனது தந்தையாரும் இன,மத, மொழி பேதங்களைக் கடந்து ஒன்றிணைந்து மக்கள் சேவைகள் பலவற்றை முன்னெடுத்துள்ளார்கள் – என்றார்.



# நான்கு கைத்துப்பாக்கிகள் வீசப்பட்ட நிலையில் மீட்பு!

## நீர்கொழும்பு சிறைக்காப்பாளரின் வீட்டில் புதைக்கப்பட்ட நிலையில் ரி – 56 தோட்டாக்கள்

புதரொன்றில் வீசப்பட்ட நிலையில் 4 கைத்துப்பாக்கிகள் மற்றும் 8 மகசின்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கொழும்பு குற்றப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, இன்று முற்பகல் 10.30 மணியளவில், கல்கிஸ்ஸை, இதிகஹதெனிய பிரதேசத்தில் வைத்து இந்த ஆயுதங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள கால்வாயுடன் இணைந்த வகையில் காணப்பட்ட காட்டுப் பகுதியில் வீசப்பட்ட நிலையில் 4 கைத்துப்பாக்கிகள் மற்றும் அதற்கான 8 மெகசின்களை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மீட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலையின் சிறைக் காப்பாளர் ஒருவரின் வீட்டின் பின்புறம் புதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட ரி – 56 வரை துப்பாக்கிகளுக்கான 13 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### சேற்றை வாரி வீசுங்கோ!

சேற்றை வாரி வீசுங்கோ
தேர்தல் காலம் பாருங்கோ
ஆற்றை வீட்டு வாசல் முற்றம்
ஆன போதும் நமக்கென்ன?
(சேற்றை வாரி)

காற்று நல்லா வீசுது
கையிலே சுளகெடு
'தூற்ற' நல்ல வாய்ப்பிருக்கு
கோர்வை விட்டு தூடித்தெழு!
(சேற்றை வாரி)

ஊத்தைஊர்திப் பேரணி
ஊர்கள் தோறும் உலாவர
நாத்தம் தாங்க முடியலை
நாடு கெட்டுப் போச்சுது
(சேற்றை வாரி)

குப்பை வண்டி வருகுது
கூட்டி அள்ளிப் போடுங்கோ!
இப்ப போனால் வாராது
இன்னும் அள்ளிப் போடுங்கோ!
(சேற்றை வாரி)

சேர சோழ பாண்டியர்
சேர்ந்து நின்ற தில்லையே
ஆளையாள் பகைத்து மோதி
அழிந்த காலம் மீண்டதே!
(சேற்றை வாரி)

சோ.பத்மநாதன் ('சோ.ப')

# கிழக்கைத் தொடர்ந்து வன்னியும் பறிபோகும்

## நிர்மலநாதன் எச்சரிக்கை

தமிழர்களிடையே ஒற்றுமையின்மையால் கிழக்கைத் தொடர்ந்து வன்னியும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கு தமிழர்களின் தாயக பிரதேசத்தில் தமிழர்களின் தனித்துவத்தை இல்லாதொழிப்பதற்காக தமிழர்கள் தங்களது அடையாளத்துடன் வாழக்கூடாது என்பதற்காக சிங்கள மக்களைக் குடியேற்றி வருகின்றார்கள்.

இதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்குடைய காணிகள் பறிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். குடியேற்றப்பட்டதுடன் மட்டுமல்ல தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் தொல்பொருள் செயலணியை உருவாகுகின்றார்.

ஆகவே வன்னியிலும் இந் நிலை உருவாகி வருகின்றது. இங்கு சிங்கள முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களை வரமுடியாமல் செய்ய முடியும். இது ஏன் எமக்கு இன்னும் விளங்கவில்லை.

2015 ஆம் ஆண்டு ரிஷாத் பதியுதீனுக்கும் மஸ்தானுக்கும் இருபதனாயிரம் தமிழர்கள் வாக்களித்தார்கள். அவர்கள் மீண்டும் உங்களை நாடி வரும் போது ஏன் அபிவிருத்தி செய்யவில்லை என கேட்பதில்லை. சாளம்பைக்குளம் எப்படி உருவாக்கப்பட்டது. ரிஷாட்பதியுர்தீனுக்கு அரசியல் பலத்தினை கொடுத்தது யார்? தமிழர்கள் வாக்களிக்காமல் ரிஷாத்தாலும் மஸ்தானாலும் வெல்ல முடியாது. அது எமக்கு விளங்குவதில்லை.

இந்த மண்ணில் பல தமிழ் மன்னர்களின் பரம்பரையில் வந்த இனம் எங்கள் தமிழ் இனம். ஆனால் இன்று நாங்கள் சின்ன சின்ன விடயங்களுக்காக எங்களை அழிப்பவர்களுக்காக அதிகாரத்தினை கொடுக்கின்றோம்.

வன்னி மக்களுக்கு மிகப்பெரிய ஆபத்துள்ளது. கிழக்கை எவ்வாறு மகாவலி மூலம் அழித்தார்களோ அதைப்போலவே வன்னியில் தமிழர்களின் இனப்பரம்பலை இல்லாதொழிக்கப் பார்க்கின்றார்கள்.

இன்று தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்ன செய்தது என கேட்கின்றனர். வன்னியில் என்ன நடக்கின்றது என் தெரியாதவர்கள் கூட்டமைப்பில் இருந்து சென்றவர்கள், இதனை கேட்கின்றனர். அது அவர்கள் தங்களையே பார்த்து கேட்கவேண்டிய கேள்வி.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்றவகையில் அபிவிருத்தி நடக்கும். நான் என்னால் முடிந்த அபிவிருத்தியை செய்திருக்கின்றேன். ஆனால் அபிவிருத்தி செய்ததற்காக வாக்குப் போட வேண்டும் என்று இல்லை. சாள்ஸ் க்கு முன்னால் வந்து கூட்டமைப்பு எதனையும் செய்யவில்லை என கூறுவதற்கு எவருக்கும் தைரியம் இல்லை. நாங்கள் அரசாங்கத்திடம் சண்டை பிடித்து கிடைத்த அபிவிருத்தியே இங்கு இடம்பெற்றுள்ளது.

2018 ஆம் அண்டு விக்னேஸ்வரன் – சிவசக்தி ஆனந்தன் கூட்டணி கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தமிழர் கூட்டணியில் கேட்டது. தமது சொந்த நலனுக்காக தமிழர்களின் இருப்பை இல்லாதொழிப்பதற்காக செயற்படுகின்றனர். எனவே மக்கள் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். – என்றார்.

# வெளிநாடுகளில் சிக்கியிருந்த 373 பேர் நாடு திரும்பினார்கள்

கொழும்பு, ஓக.02

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, இலங்கைக்கு வர முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 373 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குத் தொழில் வாய்ப்புக்காகப் புறப்பட்டுச் சென்றிருந்த இலங்கையர்கள் 332 பேரும், பிரிட்டனுக்குத் தொழில் வாய்ப்பு மற்றும் உயர் கல்வி நடவடிக்கைகளுக்காகப் புறப்பட்டுச் சென்றிருந்த 41 பேரும் இன்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள வர்த்தகக் கப்பலில் பணியாற்றுவதற்காக, வெளிநாட்டு கப்பல் பணியாளர்கள் 13 பேர் இன்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளனர். கட்டாரின் டோஹா நகரிலிருந்து அவர்கள் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

இவ்விமானப் பயணிகள் அனைவரும் விமான நிலையத்தை வந்தடைந்ததும், பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வடக்கு முஸ்லிம் சமூகத்தினால் பரப்புரை



நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் ஏற்பாட்டில் வடக்கு முஸ்லிம் சமூகத்தின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்று நேற்று (1) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் தலைவர் ஜனாப் எம்.யூ.எம். தாஹிர் அவர்களின் தலைமையில் யாழ் நகரில் அமைந்துள்ள பிள்ளையார் இன் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் என்.எம்.அப்துல்லாவினால் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு முஸ்லிம் மக்களின் நிலைப்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் முன்மொழிவு ஒன்று முன்வைக்கப்பட்டது.

அவர் தனது முன்மொழிவில் குறிப்பிட்ட விடயங்களாவன:–

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் என்கின்ற பொது அடையாளத்தோடு ஒற்றுமையாக, ஐக்கியமாக எழுந்து நிற்கவேண்டிய கட்டாயக் காலத்தில் இன்று நாம் எல்லோரும் இருக்கின்றோம். 1980 களின் தொடக்கம் வரை இப்பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆரோக்கியமான உறவுநிலைகள் காணப்பட்டன. அவை சமூக, அரசியல் ரீதியாகவும் மிக இறுக்கமான பிணைப்புடனேயே காணப்பட்டன. ஆனால் துரதிஷ்டவசமாக பிற்காலத்தில் அந்த உறவு வெகுவாக பாதிக்கப்பட்டது.

இரண்டு சமூகங்களிடையேயும் நிலவிய கருத்து முரண்பாடுகள் மிகைப்படுத்தப்பட்டன. வளங்களைப் பகிர்வதில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள் முதன்மைபெற்றன. இரு சமூகங்களிடையேயும் வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டு உயிர் இழப்புக்கள் ஏற்பட்டன. 1990 வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டமையானது இம்முரண்பாடுகளை மேலும் தீவிரப்படுத்தியது. இவையெவையும் தமிழ் மக்களுக்கோ அல்லது முஸ்லிம் மக்களுக்கோ எவ்வித சாதகமான விளைவுகளையும் இதுநாள்வரை பெற்றுத்தரவில்லைஎன்பதே எமது ஆழமான அனுபவமாகும்.

இந்த ஆழமான அனுபவத்திலிருந்து நாம் பல்வேறு பாடங்களைக் கற்றுக்கொள்கின்றோம். இந்த இடைவெளி ஏதோ ஒரு அடிப்படையில் குறைக்கப்படல் வேண்டும். இரு சமூகங்களும் முன்னரைப்போல ஐக்கியத்தோடும், ஒற்றுமையோடும் கைகோர்க்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அந்த ஒற்றுமையும், ஐக்கியமுமே இரண்டு சமூகங்களையும் அவர்களது தாயக மண்ணில் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். இதனை எமது முதன்மையான பணியாகக் கருதுகின்றோம்.

இந்த வகையில் வடக்குக் கிழக்கின் முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் அரவணைத்துச் செல்கின்ற அடிப்படைகளைக் கொண்டிருக்கின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை ஆதரிக்கும் தீர்மானத்தை வடக்கு முஸ்லிம் மக்கள் சார்பில் நாம் முன்னெடுத்தோம். அந்தத் தீர்மானத்தை எமது மக்களிடம் முடியுமானவரை நாம் கொண்டு சேர்த்திருக்கின்றோம்.

அதன் தொடர்ச்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து முஸ்லிம் மக்களின் செய்திகளை அவர்களிடமும், அவர்களின் செய்திகளை முஸ்லிம் மக்களிடமும் பகிரக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இன்றைய மாபெரும் சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

எனவே தமிழ் பேசும் மக்களாக தமிழ் – முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் தற்போதைய அவசியத்தை நன்கு உணர்ந்தவர்களாக நாம் அனைவரும் பயணிப்போம் என்பதை எதிர்வரும் 05 ஆகஸ்ட் 2020 நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்.

தமிழ் முஸ்லிம் மக்கள் – வடக்கிலே தமிழ் பேசும் மக்களாக ஒன்றினைவோம்

வடக்கின் மக்களாக பலமாக எழுவோம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடுகளை முன்மொழிவு மூலம் கேட்டறிந்த பின்னர் கலந்து கொண்ட கூட்டமைப்பு வேட்பாளர்கள் தமிழ்,முஸ்லிம் சமூகத்துடனான உறவு நிலை தொடர்பிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமிழ் பேசும் மக்களாக இணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவிக்கும் வடக்கு முஸ்லிம் மக்களின் மேற்படி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், மாநகர முதல்வர் இ.ஆனல்ட் மற்றும் வே.தபேந்திரன், கு.சுரேந்திரன் மற்றும் திருமதி இரவிராஜ் சசிகலா உள்ளிட்டோர்களும், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், ஆர். ஜெயசேகரம், மாநகரசபை உறுப்பினர் தனேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் உறுப்பினர்கள், பள்ளிவாசல்கள், கோவில்கள், தேவாலயங்களின் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ் நகர் வர்த்தகர்கள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# எமக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஒரு தடவை தந்து தாருங்கள், உரிமையையும் பெறுவோம்; அபிவிருத்தியும் செய்வோம்!

## மல்லாகத்தில் சுகாஷ் வேண்டுகோள்



எமக்கு ஒரு சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் வழங்கினால், உரிமையையும் பெறுவோம், அபிவிருத்தியையும் செய்வோம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் வலியுறுத்தினார்.

மல்லாகத்தில் நேற்று இடம் பெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும், திட்டமிட்டு புலி நீக்கம் நடந்து கொண்டிருக்கின்றது. தமிழ் தேசியம் தமிழ் தேசியப் பரப்பிலிருந்து அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்கு இந்தப் பொதுத் தேர்தலிலே நாம் முடிவு கட்டவேண்டும். அல்லது எம் இனத்துக்கு சிங்களம் முடிவு கட்டும்.

இன்று மக்களுக்குப் புரிந்து விட்டது, தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பிழை, இது தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் உருவாக்கிய கூட்டமைப்புக் கிடையாது, இது ரணில் விக்கிரமசிங்கவினுடைய கூட்டமைப்பு.

இப்போது கோட்டாபய ராஜபக்ஷவுடன் டீல் அடித்துவிட்டனர். அடித்துச் சொல்கின்றேன், இந்தப் பொதுத் தேர்தலுக்குப் பின்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோட்டாபயவின் அமைச்சரவையில் அமைச்சர்களாவார்கள். சுமந்திரன் அமைச்சுப் பதவி ஏற்பார். இதைத் தடுக்கவேண்டுமென்றால், நீங்கள் சரியானதொரு முடிவுக்கு வரவேண்டும்.

மக்கள் இன்று சைக்கிளுக்குப் பின்னால் வந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் பெரும் ஆபத்து எங்களுடைய மண்ணை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. எங்களுடைய மண்ணுக்கு பல அரசியல் கொரோனாக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். யானையிலே வந்திருக்கிறார் கலா அக்கா. கையைக் காட்டிக்கொண்டு வெள்ளையும் சொள்ளையுமா வந்திருக்கிறார் சிங்கள மாப்பிளை அங்கஜன் இராமநாதனாம். வீணை வாசிக்கின்றார் டக்ளஸ் தேவானந்தா. இவர்கள் எல்லாம் யார்? சிங்களக் கட்சிகள்.

சிந்தித்துப் பாருங்கள், சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வுள்ள காலியிலையோ, அம்பாந்தோட்டையிலோ, மாத்தறையிலோ, குருநாகலிலோ, களுத்துறையிலோ, பொலன்னறுவையிலோ ஒரு தமிழ் கட்சியில் போட்டியிட்டு ஒரு சிங்களவன் வெற்றிபெற முடியுமா? சிங்கள மக்கள் வாக்களிப்பார்களா? இல்லை. ஆனால் எங்களுடைய மண்ணில் மட்டும், தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆண்ட இந்த மண்ணில், இந்த மண் எங்களின் சொந்த மண் என்று சொன்ன

மண்ணில், சிங்களக் கட்சிகள் வாக்குகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நாங்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அன்பான மக்களே!, தேசியத் தலைவருடைய கொள்கையை ஜனநாயக வழியிலே கடைப்பிடிக்கின்ற எங்களுக்கு சாதியமும் கிடையாது, மதமும் கிடையாது, குலமும் கிடையாது, பிரதேசமும்கிடையாது. நாங்கள் தமிழர்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஐயாவினுடைய சொந்த மாவட்டமான திருகோணமலையில் தமிழர்கள் அன்று முதலாவதாக இருந்தோம். இன்று வேதனை இரண்டாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

தன்னுடைய சொந்த மாவட்டத்தைப் பாதுகாக்கத் தெரியாத ஒரு தலைவர், இனத்துக்குத் தேவையா? வவுனியா பறிபோய்க் கொண்டிருக்கின்றது, மன்னார், முல்லைத்தீவு பறிபோய்க் கொண்டிருக்கின்றன. மிஞ்சியிருப்பவை யாழ்ப்பாணமும் கிளிநொச்சியும். இவற்றையும் இழக்கப்போகின்றோமா? விகாரைகள் வந்து கொண்டிருக்கின்றன. நாவற்குழிக்கு வந்துவிட்டது, மறுபக்கம் மாதகலுக்கு வந்து விட்டது – என்றார்.

## நல்லூரில் இன்று...







படங்கள்:- பிரபாகரன் டிலக்ஷன்

# ஐ.தே.கட்சி அரசோடு உறவாடியபோது மக்களுக்கு பெற்றுக் கொடுக்காததை இனிப் பெற்றுத் தருவரா?

## கூட்டமைப்பினர் குறித்து அங்கஜன் இராமநாதன் கேள்வி



(பிரபாகரன் டிலக்சன்)
யாழ்ப்பாணம்,ஒக02

ஐ.தே.க. அரசோடு உறவாடியபோது மக்களுக்கு பெற்றுக் கொடுக்காததை எதிர்க்கட்சியில் அமர்ந்து கூட்டமைப்பினர் பெற்றுக் கொடுப்பார்களா? நடைமுறைச் சாத்தியமற்ற கருத்துக்களை மக்களிடம் அவர்கள் கூறுகின்றனர் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ் ஊடக மன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

மக்களுடைய ஆதரவு நாளாந்தம் எமக்குப் பெருகிவருகிறது. மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என பலர் முன்னின்று செயற்படுகின்றனர். தொடர்ச்சியாக ஏமாற்றமடைந்த தாம் இனியும் ஏமாறக் கூடாது என்பதற்காக இந்த மாற்றத்தினை மக்களும் விரும்புகின்றனர். இந்த மாற்றத்திற்கான அலையில்தான் நாங்களும் அரசியலை மேற்கொள்கின்றோம்.

தேர்தலுக்குப் பின் புதிய அரசமைப்பு ஒருவருடத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளார். தீபாவளிக்கு தீர்வு என்பதைப் போல் மீண்டும் ஒருவருடம் மேலதிகமாக கூட்டமைப்பினர் கேட்கின்றனர். கடந்த நான்கு அரை வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் வடக்கு, கிழக்கு கிளையாக கூட்டமைப்பினர் இயங்கினர். இந்த நான்கரை வருட காலங்களில் பெற்றுத் தராதா தீர்வையா எதிர்வரும் ஒரு வருடத்திற்குள் பெற்றுத் தரப் போகின்றனர்.

நல்லாட்சியில் கூட்டமைப்பினர் எதுவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்காமல் சரணாகதி அரசியலையே மேற்கொண்டனர். ஐ.தே.கவோடு உறவாடியபோது மக்களுக்கு பெற்றுக் கொடுக்காததை எதிர்க் கட்சியில் அமர்ந்து பெற்றுக் கொடுப்பார்களா? நடைமுறைச் சாத்தியமற்ற கருத்துக்களை மக்களிடம் கூறுகின்றனர். கடந்த காலங்களில் கூட்டமைப்பை நம்பி ஏமாந்தது போல் மக்கள் இம்முறையும் ஏமாறத் தயார் இல்லை. இதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கூட்டமைப்பினர் கடைசிக்கட்ட பிரச்சாரப் பணிகளை கவனிக்காது எம்மீது அக்கறை காட்டுகின்றனர். அரசை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்படுகின்றார், அவர் வெற்றி பெற்றாலும் அவரது உறுப்புரிமை பறிக்கப்படும் என கூட்டமைப்பின் பேச்சாளர் கூறியுள்ளார்.

நான் அவருக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அதாவது நான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் அல்லன் என்பதனை அவர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அனந்தி , அருந்தவபாலன் போன்றோரை துரத்தியது போலும் சரவணபவனை துரத்தவுள்ளது போலும் என்னையும் துரத்திவிடலாம் என நினைத்துவிட்டார். கூட்டமைப்பினர் தோல்வி பயத்தில் முன்னுக்கு பின் முரணாக பேசுகின்றனர்.

கூட்டமைப்பினர் என் மீது சேறுபூசி அரசியல் செய்வதை விடுத்து மக்களுக்கு தாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்பதனை சொல்லி வாக்குகளை கேட்க வேண்டும். அரசியல் தீர்வு, வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, குடிப்பதற்கு சுத்தமான குடிதண்ணீர் கூட மக்களுக்கு கிடைக்கவில்லை. இதுவரை காலமும் கூட்டமைப்பினர் மக்களுக்கு என்ன செய்தனர் என்ற கேள்வி எழுகின்றது.

நல்லாட்சியில் கூட்டமைப்பினர் மக்களுக்கான நலத்திட்டங்களை பெற்றுக்கொடுக்காது தங்களுக்கான நலத் திட்டங்களையே கேட்டுப் பெற்றுக்கொண்டனர். இவர்களும் மக்களுக்கு நல்லது செய்வதில்லை. மக்களுக்கு நல்லது செய்பவர்களையும் அரசியல் செய்ய விடுவதில்லை. இவர்களுக்கு இம்முறை மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்.- என்றார்.

# தள்ளாடும் வயதிலும் எம்.பி. பதவிக்காக அலையும் விக்கியைத் தோற்கடியுங்கள்!

## யாழ். மக்களிடம் சுமந்திரன் வேண்டுகோள்

(ந.லோகதயாளன்)

இலங்கையின் நாடாளுமன்றத்துக்குக் குறைந்த வயதில் சென்ற உறுப்பினர்கள் எனப் பலர் பெயர் எடுத்திருந்தாலும் முதன்முதலாகச் சென்ற வயது கூடியவர் என்ற பெருமையுடன் தனது சம்பந்திக்குச் சமாந்தரமாக நாடாளுமன்றில் தானும்அமர்ந்தேன்என்றபதிவுக்காகவே விக்னேஸ்வரன் பாடுபடுகின்றார். தள்ளாடும் வயதிலும் எம்.பி. பதவிக்காக அலையும் அவரை எமது மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பரப்புரைக் கூட்டமொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் சிறுவர்கள் மீது வன்கொடுமை புரிந்த சுவாமியைக் குருவாகக் கொண்டவரே விக்னேஸ்வரன். அந்த வன்கொடுமை புரிந்த பாவியை விடுவிக்குமாறு பாரதப் பிரதமரிடம் கோரிய ஒரு விடயத்தைத் தவிர், வடக்கு மாகாண மக்களுக்கு என எவரிடமும் எதையுமே கோராதவர்தான் அவர். இப்படிப்பட்ட விக்னேஸ்வரன் தமிழினத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுப்பேன் எனக் கூறுவதுதான் வேடிக்கையானது.

குற்றவாளி என இந்திய நீதிமன்றங்களே தீர்ப்பளித்தவரையே விடுவிக்குமாறு எமது நீதியரசர் கோரினார் என நான்பகிரங்கமாகவே தெரிவித்தபோதும்



அதற்கு இன்றுவரை முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளிக்கவில்லை என்பதன் அடிப்படையில் அதனை உண்மை என அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் பல தடவை கேள்வியாகவும்குற்றச்சாட்டாகவும்முன்வைத்த நிலையில்பதிலளிக்காதுஏற்றுக்கொண்ட ஒருவர் - முதலமைச்சராகவே சாதிக்க முடியாத மோசமான குணம் கொண்ட ஒருவர் - அவர் எப்படி தமிழினத்துக்குத் தலைவராக முடியும்? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.







காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



"தேர்தலில் இம்முறை அமோக வெற்றியீட்டுவோம்."



# வடக்கு, கிழக்கில் உள்ள எல்லா கட்சிகளையும் ஒன்றிணைத்து பயணிப்பதே எமது நிலைப்பாடு

## கருணா தெரிவிப்பு

அரசில் கைதிகள் 118 பேரே உள்ளர். இவர்களது விடுதலை தொடர்பில் காலம் கடத்தப்படுகிறதே தவிர எவ்வித முன்னெப்புக்களும் இல்லை. கடந்த கால அரசாங்கத்தில் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு கொடுத்த கூட்டமைப்பு அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அரசியல் கைதிகளுக்கு கூட்டமைப்பு செய்தது துரோகம்.

- இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை தமிழர் மகாசபையில் போட்டியிடும் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) தெரிவித்தார்..

'காலைக்கதிர்' பத்திரிக்கையில் தேர்தல் வியூகம் பகுதிக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவருடைய செவ்வியின் விவரம் பின்வருமாறு:-

கேள்வி:- தமிழர் ஐக்கிய முன்னணிக் கட்சியின் தலைவர் நீங்கள். அவ்வாறிருக்க இம்முறை அகில இலங்கைத் தமிழர் மகாசபையில் போட்டிய காரணம் ஏதும் இருக்கின்றதா?

பதில்:- ஆம். வடகிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்றாய் இணைத்து ஒரே குடையின் கீழ் ஒற்றுமையுடன் இம்முறை நாடாளுமன்ற தேர்தலை முன்னெடுப்பதற்காக உத்தேசித்தேன். இதனடிப்படையில் சகல கட்சிகளிடமும் எனது எண்ணப்பாட்டினை வெளியிட்டேன். ஆனால் வருவதாக ஆமோதித்தவர்கள் கடைசியில் கைவிரித்துவிட்டார்கள். அதன் பிறகு அகில இலங்கை மகாசபை கட்சியின் தலைவர் விக்கினேஸ்வரன் ஐயாவிடம் இது பற்றி கதைத்தோம். அவரின்இணக்கப்பாட்டின் அடைப்படையில் பழமையானதும் பாரம்பரியம் மிக்கதுமான அகில இலங்கை மகாசபையில் கப்பல் சின்னத்தில் போட்டியிடுகிறேன். எமது நோக்கம் எல்லாக் கட்சியையும் ஒன்றிணைத்து பயணித்து எமக்கான தீர்வுகளையும் அபிவிருத்தியையும் பெற்றுக்கொள்வதேயாகும்.

"தமிழ் அரசியல்கைதிகள் விடயத்தில் கூட்டமைப்பு செய்தது துரோகம்"

கேள்வி:-அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு எவ்வாறு இருக்கின்றது?

பதில்:- அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பு செய்தது துரோகமே. ஏனெனில் கடந்த கால நல்லாட்சி அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கி அந்த அரசை காப்பாற்றியது. ஆனால் அன்று தீர்வு விடயம் தொடர்பிலும், அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பிலும் முக்கிய பிரச்சினை யாவுள்ள கல்முனை பிரதேச செயலகம் தரமுயர்த்தல் தொடர்பிலும் இன்னோரன்ன முக்கிய விடயங்கள் தொடர்பிலும் பேச்சு நடாத்தாது வெறுமனே தமது குறுகிய இலாப நோக்கத்துக்காக ஆதரவை வழங்கியது தவறாகும். அரசியல் கைதிகள் 118 பேர் மாத்திரமே உள்ளனர். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாம் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவிடம் கைதிகள் விடுதலை தொடர்பில் உறுதியான கோரியை முன்வைத்துள்ளோம். தற்கால கொரோனா சூழ்நிலை காரணமாக அந்த விவகாரம் தள்ளிப்போய் கொண்டிருக்கிறது. எதிர்வரும் தேர்தலின் வெற்றியின் பின்னர் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

தேர்தல் வியூகம்

செவ்வி :- செல்வி

கேள்வி :-இம்முறை தேர்தலில் போட்டியிட ஏதும் காரணங்கள் இருக்கிறதா?

பதில்:- ஆம். கடந்த காலங்களில் இரண்டுமுறை தேசிய பட்டியல் மூலம் அமைச்சுப் பதவிகள் எனக்கு கிடைத்தன. அதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்னேன். ஆனால் இம்முறை தேர்தலில் குதித்து மக்களின் ஆணையுடன் நாடாளுமன்றம் சென்று அம்பாறை மாவட்டம் மட்டும் என என் கடமைகள் மட்டுப்படுத்தபடாமல் வடகிழக்கு முழுவதும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதே எனது எண்ணப்பாடாகும்.

கேள்வி:-இம்முறை திகாமடுல்ல மாவட்டத்தில் கப்பல் சின்னம் வெற்றியீட்டும் என எதிர்பார்க்கின்றீர்களா?

பதில்:- ஆம். நிச்சயமாக 100 வீதம் வெல்வோம். அம்பாறை மாவட்ட. தமிழர்கள் என் பின்னால் அணி திரண்டிருக்கிறார்கள். நிச்சயம் அதற்கான ஆணையை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

கேள்வி :- பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. கூட்டமைப்பின் பால் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியால் மக்கள் உங்களைத் தேர்தெடுக்கலாம் என்கிறார்கள்?

பதில்:- இதில் இரண்டு விடயங்களை கருத்தில் கொள்ளவேண்டும். கருணா அம்மான் ஆகிய நான் இது வரை எந்த தேர்தலிலும் போட்டியிடவில்லை. முதன்முதலாக தற்போதுதான் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுகின்றேன். கிட்டத்தட்ட 30 வருடகால யுத்தத்தில் பயணித்தவன் என்ற அடிப்படையில் விடுதலைப்புலிகள் சார்பில் 26 நாடுகளில் மத்திய மந்திரி அன்டன் பாலசிங்கத்தோடு இணைந்து பேச்சு வார்த்தைகளை நடாத்தியுள்ளேன். இவ்வாறான தகைமையின் அடிப்படையில்தான் இம்முறை அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டுள்ளேன். இரண்டாவது இம்மாவட்டத்தின் சூழலின் அடிப்படையில் சிறந்த தலைமைத்துவம் அவசியமாகவுள்ளது. அபிவிருத்தி அங்கில்லை,தேவைகள் அதிகம் உள்ள நிலையில் என் பின்னால் மக்கள் இன்று அணி திரண்டுள்ளனர். அம்மக்களின் தேவைகளை பொறுத்தே இம்முறை தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டுள்ளேன்.

கேள்வி:- கடந்த காலங்களில் தேசியத்தோடு பயணித்து விடுதலை போராட்டத்தில் பங்கெடுத்த நீங்கள் பிற்பட்ட நாள்களில் துரோகி என்ற பரிணாமத்தில் நிற்கிறீர்கள். இம்முறை தேர்தலில் மக்கள் ஆணை வழங்கும் போது அதன் பிரதிபலிப்புக்கள் தொடரும் என்ற ஐயப்பாடு உள்ளது. இது தொடர்பில் உங்கள் கருத்து எவ்வாறு இருக்கின்றது?

பதில்:- போராட்டத்தை முன்னெடுத்தவன் நான் என்ற வகையில் நான் ஒரு நாளும் துரோகம் செய்யவில்லை. ஒஸ்லோ பேச்சுவார்தையின் பின்னர் சமஷ்டி முறையான தீர்வை கொண்டுவருவதற்காகவே அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்தோம். அதில் ஏற்பட்ட சிறு முரண்பாடே தலைவருக்கும் எனக்கும் ஏற்பட்டது. ஆனால் தலைவர் எங்கும் என்னை துரோகி எனச் சொல்லவில்லை. அதேவேளை நானும் தலைவரை எங்கும் குறை கூறவில்லை. தலைவரின் வழிநடத்தலின் வாழ்ந்தவன் நான் எனும் வகையில் இன்றுவரை அவரை மதிக்கின்றேன். ஆனால் புலம்பெயர்ந்து வாழும் சில புல்லுருவிகளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு விம்பமே இதுவாகும்.

### காணி அதிகாரத்தினை விட்டுக்கொடுக்க முடியாது

கேள்வி:- இம்முறை தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் தீர்வு விடயத்தில் 13ஆவது திருத்தம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளீர்களே?

பதில்:- ஆம். 13 சீர்திருத்தில் மகாணசபை முறைமையில் சிறுபான்மையினருக்கான அதிகாரங்கள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை அமுல்படுத்தல் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பல தடவை பேசியுள்ளேன். இது தொடர்பில் சாதகமான பல விடயங்களை செய்து தருவதாக குறிப்பிட்டுள்ளார். இதில் அதிகாரப் பகிர்வு காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் காணி அதிகாரத்தை ஒரு போதும் விட்டுக் கொடுக்கும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. ஏனெனில் தமிழர்களின் பூர்வீக காணிகள் பறிபோய்க் கொண்டிருக்கிறது. இந்நிலையை ஏற்றுக்கொள்ள முடியாது. மகாண சபைக்குரிய காணி அதிகாரம் நிச்சயம் வழங்கப்படவேண்டும். எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் வெற்றியீட்டி தமிழர் ஒருவரே முதலமைச்சராக வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். கடந்த காலங்களில் கிழக்கு மகாண சபையில் கூட்டமைப்பு செய்த தவறின் விளைவையே இன்று நாம் எதிர் நோக்கிகொண்டிருக்கிறோம்.

"அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் கூட்டமைப்பு செய்தது துரோகம்"

கேள்வி :-ஜனாதிபதியின் கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணிக் குழு தொடர்பில் உங்கள் நிலைப்பாடு எவ்வாறு இருக்கின்றது?

பதில்:- இது சம்பந்தமாக ஏற்கனவே எனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளேன். தொல்பொருள் மீளாய்வு தொடர்பில் திருத்தங்கள் செய்யுமாறு பிரமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் பேசியுள்ளேன். எமது மக்கள் சார்பில் தமிழ் தொல்பொருள் வரலாற்று ஆய்வாளர்கள், தமிழ் விரிவுரையார்கள், மதகுருமார்கள் இருந்தும் இந்தச் செயலணியில் யாரும் உள் வாங்கப்படவில்லை என்பது தொடர்பிலும் எமது தரப்பில்ஆட்சேபனை உள்ளது. அண்மையில் வெல்லாவெளியில் நடந்த சம்பவம் அதற்கு ஒரு சான்று. இவ்வாறான சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. தற்கால சூழல் அதற்கு பொருத்தபாடில்லாத நிலையில் தேர்தல் வெற்றியின் பின்னர் இதற்கான முன்னெடுப்புகளை நிச்சயம் மேற்கொள்வோம்.

கேள்வி:- ஆயுதப்போராட்டதை ஆதரிக்கின்றீர்களா?

பதில்:- இல்லை. ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். யுத்தத்தில் சொந்த அண்ணனை இழந்தவன் நான். என்கின்ற வகையில் அதன் வலி எனக்கு புரியும். இன்று வடகிழக்கில் பல்லாயிரம் போராளிகளை இழந்து நிற்கின்றேம். இக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் வலி சுமந்த வாழ்க்கையே இன்றுவரை வாழ்கின்றனர். இதிலிருந்து விடுபட்டு எமது இளைஞர், யுவதிகளை சரியான முறையில் கட்டமைக்கப்பட்ட சிறந்த வாழ்வியல் சூழலை ஊடாக கொண்டு செல்வதே எனது எதிர்பார்பாகும்.

கேள்வி: -கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு எவ்வறு இருக்கிறது.?

பதில்:- இது கடினமான விடயமல்ல. செயற்படுத்தக் கூடிய விடயமே. இதற்கு முட்டுக்கட்டையாக உள்ளவர்கள் முஸ்லிம் அரசியல் வாதிகள் மட்டுமே. இது தொடர்பில் கருத்துக்கூறி அரசியல் செய்ய நான் விரும்பவில்லை. எங்கள் கட்சி சார்பில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி கோட்டாயவோடு தீர்க்கமான முடிவை எடுத்திருக்கிறோம். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமும் இது பற்றி பேசியுள்ளேன். தேர்தல் வெற்றியின் பின்னர் தரமுயர்த்தித் தருவதாக கூறியுள்ளார். நிச்சயம் தரமுயர்த்தப்படும். இதில் மாற்றுக்கருத்தில்லை.

# வரலாற்றைப் புரிந்து வாக்களியுங்கள்! தமிழரசு வாலிப முன்னணி கோரிக்கை

வரலாற்றைப் புரிந்து வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோரியிருக்கின்றது தமிழரசு வாலிப முன்னணி. இது தொடர்பில் அந்த அமைப்பு நேற்று விடுத்த நீண்ட அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

அன்பிற்கினிய தமிழ்பேசும் மக்களே!.

இந்தத் தேர்தல் நேரத்தில் தங்களுடன் சில கருத்துக்களை பகிர்ந்துகொள்ள வேண்டியது எங்களுடைய கடமையும் உரிமையும் ஆகும். இலங்கையின் வரலாற்றில் சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து (1948) இன்று வரையான(2020) கால வரலாற்றில் அரசியல் அமைப்புக்கள் மற்றும் போராட்ட இயக்கங்கள் என்பவற்றின் வகிபாகங்களையும் அவற்றின் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்ட முயற்சிகளையும் தியாகங்களையும் வாக்களிப்பதற்கு முன்னர் சிந்திக்க வேண்டும்.

இக் காலகட்டத்தின் வரலாற்றை நன்கு அறிந்தவர்கள் தவிர ஏனையோர் வயது வேறுபாடு இன்றி சகலரும் வரலாற்றை நன்கு அறிந்துகொண்ட பின்னர் வாக்களிக்குமாறு உங்களைப் பணிவாக வேண்டிக்கொள்கின்றோம்.

கடந்த ஆயுதப் போராட்ட காலத்தின் பலனாக லட்சக்கணக்கான எமது உறவுகள் உலகின் பலநாடுகளில் பரந்து வாழ்கின்றார்கள். அந் நாடுகளில் பல இன கலாச்சார முறைகளைக் கொண்ட மக்கள் எங்ஙனமாக சம அந்தஸ்துடன் ஆட்சி செய்யப்படுகிறார்கள் என்பதனை அவர்கள் ஊடாக நாங்கள் அறிந்து கொள்ளமுடியும். அங்ஙனமாக நாங்களும் எமது தாயக பிரதேசத்தில் கௌரவமாக, சமஅந்தஸ்துடன் வாழும் உரிமையை அரசியல் அமைப்பு ரீதியாக உறுதிப்படுத்துமாறு எமது தலைவர்கள் பலரும் கடந்த 72 வருடங்களாக கோரி வருகின்றனர். அதனை மறுக்கும் அரசியல் கட்சிகளே கடந்த 72 வருடகாலமாக இந்நாட்டை ஆட்சி செய்து வந்தும் இன்றைய இந்தத் தேர்தலிலும் எமது தாயக பிரதேசங்களில் எம்மக்களிற்கு சேவை செய்யப் போவதாக கூறி தமது பிரதிநிதிகளையும் களமிறக்கியுள்ளனர். சிந்தியுங்கள்.

எமது ஆரம்ப காலத்தில் ஜனநாயக ரீதியான அகிம்சைப் போராட்டங்கள் நசுக்கப்பட்டவேளை ஆயுதப் போராட்டங்கள் முளைவிட்டு பெரியவிருட்சமாக காணப்பட்டபோது ஆயுதபலத்தை இல்லாதொழிப்பதற்காக எதிரியின் கைக்கூலிகளாக செயற்பட்டவர்களும் அரசியல் முலாம் பூசப்பட்டு 1994 இல் முதன்முதலாக தேர்தல் களத்திலிறக்கப்பட்டவர்களும் எமது மக்களிற்கு சேவையாற்றப் போகின்றோம் என களத்தில் தமது பிரதிநிதிகளை இறக்கியுள்ளார்கள் சிந்தியுங்கள்.

வடஅயர்லாந்தில் ஐசுயு என்ற போராட்ட அமைப்பிற்கு நிகராக சிம்பெயின் என்ற அரசியல் அமைப்பு எங்ஙனம் இயங்கியதோ அதேபோன்று எமது ஆயுதப்போராட்டத்திற்கு நிகராக அரசியல் இயக்கம் ஒன்றும் தந்தை செல்வாவின் ஒற்றுமை எனும் சிந்தனைக்கு இணங்க தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் தமிழ் இனப்பற்றாளர்களினாலும் அரசியல் கட்சிகள், போராட்ட இயக்கம் என்பவற்றுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பலனாக 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற கூட்டு உருவாக்கப்பட்டது. இவ் உருவாக்க முயற்சியில் ஈடுபட்டதனாலேயே நாட்டுப்பற்றாளர்கள் சிலர் தங்கள் இன்னுயிரை இழக்க நேரிட்டது. பலமான ஆயுதப் போராட்ட அமைப்பும் அதற்கு சமாந்தரமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஜனநாயக அமைப்பு உலகெங்கும் பரந்து வாழ்ந்த தமிழ் பேசும் மக்களின் ஆதரவு பெற்று 2000ஆம் ஆண்டுகளில் எமது இனம் பலமான ஒரு நிலையில் இருந்தது.

கால ஓட்டத்தில் எமது போராட்ட பலம் உலக ஒழுங்கில் உலக வல்லரசுகளுடன் ஒன்று சேர்ந்த நிகழ்ச்சி நிரல்களுடன் இயங்க முடியாமல் 2009இல் பேரழிவுகளுடன் ஆயுதப் போராட்டம் முடிவிற்கு வந்தது. அக் காலகட்டத்தில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பலமாக இருந்தும் அந்த அழிவை தடுக்கமுடியாது இருந்தது. இருந்தும் அந்த அழிவிற்கு ஒரு சிலர் தம் பொறுப்பை மறந்து மற்றவர் மீது குற்றம் சுமத்தும் செயலைச் செய்தனர். இருந்த போதிலும் இந்த நிலமைக்குப் பின் தமிழ்ப் பேசும் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரே சக்தியாக தமிழத் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே என மக்கள் நம்பியிருந்தனர். மக்களின் விருப்புகளிற்கு மாறாக கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் முயற்சியாக கூட்டமைப்பிலிருந்து சில கட்சிகள் கால ஓட்டத்தில் வெளியேறின. இது எமது மக்களிற்கு அக் கட்சிகள் செய்த நம்பிக்கை துரோகமாகவே கருதுகின்றோம். என்ன பிரச்சினையாக இருந்தாலும் கூட்டுக்குள் இருந்து கொண்டே போராடியிருக்க வேண்டியவர்கள் மக்களின் விருப்பிற்குமாறாகக் கூட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள். இதனைச் சிந்தியுங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளில் பல நீண்ட கால அனுபவம் வாய்ந்த தலைவர்கள் இருக்கும் போதும் பல காரணங்களிற்காக மாகாண சபை தேர்தலில் பல புதிய முகங்கள் தலைமகளால் களமிறக்கப்பட்டு மக்களிற்கு விளக்கமளிக்கப்பட்டு அமோக வெற்றி பெறப்பட்டு யுத்தத்தால் பெருவாரியாக பாதிக்கப்பட்ட மக்களிற்கு மறு வாழ்வுடன் கூடிய புனர்வாழ்வினை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட மாகாணசபை நிர்வாகம் பல கோடி ரூபா பணத்தினை பயன்படுத்தாது மத்திய திறைசேரிக்குத் திருப்பி அனுப்பியது மாத்திரமல்லாது உலக வங்கி பெருந்திட்டங்களுக்காக நிதி ஒதுக்க முன் வந்த போது தன் உறவுக்காரரை அந்நிதியைக் கையாளும் பொறுப்புக்கு நியமித்த பொழுது அந் நியமனம் ஏற்காததால் அந்த உதவித் திட்டத்தையும் நிதியையும் திருப்பி அனுப்பினர். நடந்த பல திட்டங்களிலும் மோசடிகள் இடம்பெற்றன என விசாரணை அறிக்கைகள் கூறுகின்றன. இவர்கள்தான் பல சின்னங்களிலும் இத் தேர்தலில் தமது பிரதிநிதிகளை களம் இறக்கியுள்ளனர். இவர்கள் தான் கூட்டமைப்பை விமர்சிக்கின்றனர். மக்களே நீங்கள் சிந்தியுங்கள்.

எனவே அன்பான எம் இனிய உறவுகளே! எம் இனத்தின் அரசியல் சக்தி ஒன்று ஒற்றுமையாகப் பலம் பெறக் கூடாதென நிகழ்ச்சிநிரலில் சிலர் இயங்குகின்றனர். அந் நிகழ்ச்சிநிரலின் தன்மையினை அறியாத பலரும் அவர்களுடன் சில சலுகைகளிற்காகவும் நன்மைகளிற்காகவும் சேர்ந்து இயங்குகின்றனர். எவ்வித சலுகைகளிற்கும் விலைபோகாமல் பல தலைவர்களின் உயிர்களையே அர்ப்பணித்து தாயக தமிழ்பேசும் மக்களின் உரிமைக்காகத் தொடர்ந்து தாயகத்திலும் சர்வதேச அளவிலும் குரல் கொடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்ய வேண்டியது தமிழ் பேசும் தாயக உறவுகளின் தலையாய கடமையாகும். கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் உரிமைக்காக மற்றும் நலனுக்காக காத்திரமான பங்களிப்பை மேற்கொண்டது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இம்முறை தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிப்பதற்காகவும், தமிழ்த் தேசியத்தை மழுங்கடிப்பதற்காகவும் எம்மை தோற்கடிப்பதற்கு 18 அரசியல் கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளமை நல்ல சான்றாகும். அத்தோடு எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் நோக்கில் எமது லட்சியத்துடன் பயணிப்போரை ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுவதோடு எமது உரிமையைப் பெறும்வரை நாங்கள் யாவரும் ஒற்றுமையாக வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலம்வாய்ந்த ஓர் அரசியல் சக்தியாக நிலை நிறுத்த வேண்டும் எனப் பணிவுடனும் தயவாகவும் அன்பாகவும் கேட்டுக் கொள்கின்றோம். – என்று உள்ளது.

# தமிழர்களின் ஏகோபித்த சக்தியாக செயற்பட தமிழ்க் கூட்டமைப்பைத் தெரிவு செய்வோம்

## யாழ். வணிகர் கழக முன்னாள் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 02

எதிர்வரும் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய தாயகம் என்பதை உறுதிப்படுத்தி ஒரு நீதியான தீர்வைப்பெற உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமிழர்களின் ஏகோபித்த சக்தியாக செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவுசெய்வோம் என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் யாழ். வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவருமான இ.ஜெயசேகரன் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;–

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்பு அப்போதிருந்த அரசு தனிச்சிங்கள நாடாக சித்தரித்து அதற்குரிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது. அதற்குரிய வேலைத்திட்டங்களாக தனிச் சிங்களமொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டமை, தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம், தமிழர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் புறக்கணிப்பு, தமிழ் பகுதியின் அபிவிருத்தியில் பாராபட்சம், தமிழ் மாணவர்களுக்கான கல்வி தரப்படுத்தல் முறைமை, பொருளாதார ரீதியில் முன்னணி வகித்த தமிழர்களை கலவரங்களை ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் அழித்தமை, தமிழர்களுடைய வரலாற்று இடங்களை தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் மூலம் கையகப்படுத்தல் அல்லது பௌத்த விகாரை அமைத்தல், தமிழர்களுடைய வரலாற்று சுவடுகள், பொக்கிஷங்கள் அடங்கிய யாழ்ப்பாணம் நூல் நிலையத்தினை எரித்தமை, தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை குழப்பி உயிர்ச்சேதத்தினை ஏற்படுத்தியமை.

இப்படியான தமிழ் விரோத கொள்கைகளை காலம் காலமாக நடைமுறைப்படுத்தி வந்துள்ளார்கள். அண்மைக் காலமாக பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்கள் அமைந்த இடங்கள் தங்களுக்குரித்தானதென்றும், வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழர்களுடைய தாயகம் இல்லை என்றும், தமிழர்கள் சுயாட்சி கேட்டால் இரத்த ஆறு ஓடும் என்று சொல்கிறார்கள்.

இப்படியானவர்களுக்கா தமிழ் மக்கள் வாக்களிக்கப் போகின்றார்கள்? இவற்றையெல்லாம் கவனத்திலெடுத்து தமிழ் மக்கள் தங்கள் வாக்கை பிரயோகிக்க வேண்டிய காலகட்டம் இது. நாங்கள் தென்னிலங்கை சக்திகளுக்கு அழிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் இவை எல்லாவற்றையும் அங்கீகரிப்பதாக முடிந்து விடும். ஆகையால் தமிழ் மக்களே நன்கு சிந்தித்து செயற்படுங்கள்.

1949ஆம் ஆண்டு தந்தை செல்வா தமிழரசு கட்சியை ஆரம்பித்ததில் இருந்து ஒரே கொள்கையான சமஷ்டி கொள்கையை முன்னிறுத்தி வந்துள்ளார். அந்த அடிப்படையிலே தந்தை செல்வாவினால் மேற்கொள்ளப்பட்ட பண்டா செல்வா, மற்றும் டட்லி செல்வா ஒப்பந்தங்கள் அமைந்தன. அந்த ஒப்பந்தங்களைக்கூட அமுல்நடத்தாமல் தூக்கியெறிந்தது இலங்கை அரசு. வேறு வழியின்றியே வயது முதிர்ந்த காலத்தில் தமிழ் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தனிவழி போவதற்காக வட்டுக்கோட்டை தீர்மானத்தை 1976ம் ஆண்டு நிறைவேற்றினார்கள். அதற்கான செயல்வடிவை கொடுக்க முற்பட்டவர்களே தமிழ் இளைஞர்கள்.

இளைஞர்களின் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு சில புத்த பிக்குகளும், தென்னிலங்கை அரசியல் வாதிகளும் இனவாதம் பேசுகின்றார்கள், போரில் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மமதையில் தமிழர்களை அடக்கி ஆழ முற்படுகின்றார்கள்.

ஆகையால் அன்பார்ந்த தமிழ் மக்களே இந்தியா உள்பட்ட சர்வதேசத்தின் ஆதரவுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைகள் சுயாட்சி அதிகாரமுள்ள ஒரு நியாயமான தீர்வை நோக்கி முன்னெடுத்துச் செல்கின்ற இவ்வேளையிலே கடந்த 72 வருடங்களாக இனவிடுதலைக்காக போராடிய தமிழ் மக்களுடைய நோக்கம் நிறைவேற தமிழ் மக்களாகிய நாங்கள் உரிமைப் போராட்டத்தில் உறுதியாகவும், பற்றுறுதியுடனும் இருக்கின்றோம் என்பதை தென்னிலங்கைக்கும், உலகிற்கும் உறுதியாக தெரிவிப்பதற்கு உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துங்கள்.

ஐ.நா. பிரகடனத்தின்படி எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. ஆனால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அது மறுக்கப்படுகின்றது. உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் எங்களுக்கு எங்களை ஆழ உரிமையுள்ளது. அதை அரசும், சிங்கள இனவாதிகளும் வழங்க மறுக்கின்றார்கள். அதை நாம் பெறுவதற்கு மட்டுமே அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும். உரிமைகள் கிடைக்காமல் அரசுடன் சேர்ந்து இயங்கினால் எமது உரிமைப்போராட்டம் அழிந்துவிடும்.

கடந்த 72 வருடங்களாக எமது உரிமைக்காக அகிம்சை, ஆயுத வழிகளில் போராடி பல உயிர்களை இழந்த எமது போராட்டத்தை வீணடிக்காமல் எமது இனம் தனித்துவமாக தேர்தலில் வெற்றியடைய வேண்டும். ஆகவே வடக்கு கிழக்கு தமிழர்களுடைய தாயகம் என்பதையும், எமக்கு சலுகைகள் அல்ல உரிமைகளே தேவை என்பதையும் உறுதிப்படுத்த ஒரு வாக்கைக் கூட வீணடிக்காமல் அதிகளவானோர் தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களை வெற்றியடையச் செய்யுங்கள். இதன் மூலம் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் தமிழர்களின் பலமான ஏகோபித்த அரசியல் சக்தியாக செயற்பட தமிழ் தேசிய கூட்டமைப்பை தெரிவுசெய்து அங்கீகாரத்தை வழங்குங்கள் – என்றுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.2020 இல் வெளியிடப்பெற்றது.